Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 20, 2024

புதன்கிழமை நவம்பர் 20, 2024 | ஒளி: 10 கதிர்: 096 | பக்கம்:07 | நகரப்பதிப்பு | FREE

## கூகுள் குரோமுக்கு வந்த சோதனை



கூகுள் குரோம் பிரவுசரை விற்பனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தை அமெரிக்க நீதித்துறை கொடுக்கும் என்ற தகவல் வெளியாகி உள்ளது.

உலகம் முழுவதும் பலரும் தங்களது ஸ்மார்ட்போன், லேப்டாப், டெஸ்க்டாப்,

தொடர்ச்சி P2

# “முஸ்லிம்களின் உணர்வுகளை புரியாது செயற்படுவது கவலை”

ஏ.எச்.ஹஸ்பர்



ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான புதிய அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாது செயற்படுவது மிகவும் கவலையைத் தருகின்றது என, கடந்த பொதுத் தேர்தலில், திருகோணமலை மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்துள்ளார்.

மேற்படி விவகாரம் தொடர்பில், ஊடகங்களுக்குச் செவ்வாய்க்கிழமை (19) கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, முஸ்லிம் மக்களும் இந்நாட்டின் பிரஜைகள். அந்த வகையில் இந்த சமூகமும் ஏனைய சமூகங்களைப் போன்று கௌரவத்துடன், இந்நாட்டில் வாழ விரும்புகின்றது. இந்நாட்டின் சுதந்திர காலம் தொட்டு நியமிக்கப்பட்டு வந்த அமைச்சரவையில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதித்துவம் இருந்து வந்துள்ளது.

இலங்கை அரசியல் வரலாற்றில் முதற்தடவையாக இந்த அரசாங்கம் நியமித்த அமைச்சரவையில் முஸ்லிம் சமூகத்தின் பிரதிநிதித்துவம் இல்லாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளது. இதனால் நாடு முழுவதும் உள்ள முஸ்லிம் சமூகம் மிகுந்த கவலை கொண்டுள்ளது. சமூக வலைத்தளங்களை அவதானிக்கின்ற போது இதனைப் புரிந்து கொள்ள முடிகின்றது.

இந்த அரசாங்கத்தின் கடந்த குறுகிய கால செயற்பாடுகள் சிலவற்றை பரக்கும் போது,

தொடர்ச்சி P2

## ‘கற்கோவளம்’ இராணுவ முகாமை அகற்ற கோரிக்கை



நிதர்ஷன் வினோத்

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை, கற்கோவளம் இராணுவ முகாமை 14 நாட்களுக்குள் அகற்றி, குறித்த காணியை உரிமையாளர்களிடம் ஒப்படைக்குமாறு இராணுவ தலைமையகம் அறிவித்துள்ளது.

மூவருக்கு சொந்தமான மூன்று ஏக்கர் காணியை விடுவிக்க உத்தரவிடப்பட்டுள்ளதுடன், இதற்கமைய திங்கட்கிழமை(18) மாலையில் இருந்து இராணுவ முகாமை அகற்றும் பணி இடம்பெற்று வருகிறது.

தொடர்ச்சி P2

## அமைச்சரவை பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ



புதிய அரசாங்கத்தின் முதலாவது அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் செவ்வாய்க்கிழமை(19) முற்பகல் இடம்பெற்றது.

புதிய அமைச்சரவையின் ஊடகப் பேச்சாளராக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டொக்டர் நளிந்த ஜயதிஸ்ஸ நியமிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

## “அனுர மாயாஜால வித்தகர்”



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவை முழுமையாகப் பெற்ற ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, மாயாஜால வித்தைக்காரரர் என்றே குறிப்பிட வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (18) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சி P2

## ரவியின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு

முன்னாள் நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவின் பத்தரமுல்லையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்திற்கு வெளியே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

நவம்பர் 14ஆம் திகதியன்று நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து புதிய ஜனநாயக முன்னணிக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு தேசியப் பட்டியல் ஆசனங்களில் ஒன்றிற்கு கருணாநாயக்கவின் பெயரை தேர்தல்கள் ஆணைக்குழு திங்கட்கிழமை (18) வர்த்தமானியில் வெளியிட்டது.

தொடர்ச்சி P2



### கணினி அமைப்பில் கோளாறு;

## விவசாயிகளுக்கு பணம் கிடைக்கவில்லை

கணினி அமைப்பில் ஏற்பட்டுள்ள கோளாறு காரணமாக உர மானியப் பணம் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வரவு வைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் ஆராய அதிகாரிகள் குழுவொன்று நேற்று அனுப்பி வைக்கப்பட்டதாகத் தெரிவித்த விவசாய அமைச்சு, இது தொடர்பான அறிக்கையை செவ்வாய்கிழமை(19) விவசாய அமைச்சின் செயலாளரிடம் கையளிக்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

உர மானிய பணத்தை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடுவதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### தமிழ் தேசியத்தை

## “கறையான் அரிப்பது போல் அரிக்கின்றது”

கனகராசா சரவணன்

தற்போது அட்சி அமைத்துள்ள அரசாங்கம், அதன் ஜனாதிபதி, அந்த கட்சி தமிழ்த் தேசியத்தையும் தமிழ்மக்களின் பிரச்சினைகளையும் கறையான் அரிப்பது போன்று உள்ளதால் அழித்துக் கொண்டு செல்கின்றது. எனவே, எங்களது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமானால், நாங்கள் எங்களுக்குள் இருக்கும் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் தொடர்ந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இல்லாவிட்டால் எமது மக்களின் எதிர்காலம் சூனியமாகும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

தொடர்ச்சி P2



## புலிகளின் முக்கிய தளபதிகள் பாவித்த துப்பாக்கியா?

பாறுக் ஷிஹான்



கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்களுடன் கைது செய்யப்பட்ட முன்னாள் இராணுவ வீரரிடம் மேலதிக விசாரணைகள் பல கோணங்களில் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

அம்பாறை வாவின்ன பரகஹகலே பகுதியில் வைத்துக் கடந்த 17.11.2024 அன்று மாலை கைது செய்யப்பட்ட நபர் பின்னர் இகினியாகல பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

அம்பாறை விசேட அதிரடிப் படை புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் பேரில், இகினியாகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வாவின்ன பரகஹகலே பகுதியில் உள்ள வீடொன்றில் வைத்து வெளி நாட்டில் தயாரிக்கப்பட்ட மைக்ரோ ரக தானியங்கி கைத்துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்கள் மற்றும் இரண்டு தோட்டா மெகசீன்கள் மற்றும் ஆயுதங்களைச் சுத்தம் செய்யும் கருவியை தன்வசம் வைத்திருந்த சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2



## சபாநாயகர் நிஹால்

ஆளுங் கட்சியின் பாராளுமன்ற சபை முதல்வராக அமைச்சர் பிமல் ரத்நாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை, சபாநாயகராக, சிரேஷ்ட உறுப்பினர் நிஹால் நிஹால் கலப்பத்தியை நியமிக்கப்பட்டுள்ளார்.



## “மீண்டும் வருவார்”

முன்னாள் அமைச்சரும் புதிய ஜனநாயக முன்னணியின் (NDF) வேட்பாளருமான காஞ்சன விஜேசேகர தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்றத்திற்கு வருவார் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான அருந்திக பெர்னாண்டோ, சாமர சம்பத் தசநாயக்க, பிரேம்நாத் சி.தொலவத்த உள்ளிட்ட பலர்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “முஸ்லிம்களின் உணர்வுகளை புரியாது செயற்படுவது கவலை”

முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இந்த அரசாங்கத்திற்கு இருக்கின்றதோ என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டுள்ளது.

இலங்கையில் முஸ்லிம் மக்கள் பெரும்பான்மையாக வாழ்கின்ற கிழக்கு மாகாணத்தில் அந்த மாகாண ஆளுநரால் நியமிக்கப்பட்ட 6 தவிசாளர்கள் பதவிகளில் எந்தவொரு முஸ்லிம் தவிசாளரும் நியமிக்கப்படவில்லை. இந்த விடயம் பேசு பொருளான பின்னர் ஒரு முஸ்லிம் தவிசாளர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதேபோல, இந்த அரசாங்கத்திற்குக் கிடைக்கப்பெற்ற 18 தேசியப்பட்டியல் ஆசனங்கள் தொடர்பான பெயர்ப் பட்டியல் முன்னர் வெளியிடப்பட்ட போது எந்தவொரு முஸ்லிம் உறுப்பினரதும் பெயர் வெளிவரவில்லை. பின்னர் இதுவும் பேசுபொருளான பின்னர், ஒரு முஸ்லிம் உறுப்பினரது பெயரோடு புதிய பட்டியல் வெளியானது.

அந்த வரிசையிலேயே இப்போது இந்த அரசாங்கம் நியமித்துள்ள அமைச்சரவையில் இலங்கை வரலாற்றில் முதற்தடவையாக முஸ்லிம் பிரதிநிதித்துவம் இல்லாது செய்யப்பட்டுள்ளது. முஸ்லிம்களுக்கு எதிரான இனத் துவேசத்தை விதைத்து ஆட்சிக்கு வந்த கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தின் அமைச்சரவையில் கூட முஸ்லிம் பிரதிநிதித்துவம் இருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இந்த உதாரணங்களை வைத்து நோக்கும் போது இந்த அரசாங்கத்திற்கு முஸ்லிம்கள் தொடர்பான வித்தியாசமான எண்ணம் இருப்பது போலவே எனக்குத் தோன்றுகின்றது. இப்படியிருந்தால் இந்த ஆரம்பத்திலேயே இது கலையப்பட வேண்டும். இந்த அரசாங்கத்தோடு இணைந்திருக்கின்ற முஸ்லிம்கள் இந்தப் பணியைச் செய்ய வேண்டும்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் நாடளாவிய



ரீதியில் அளிக்கப்பட்டுள்ள சுமார் 15 இலட்சம் முஸ்லிம் வாக்குகளுள் சுமார் 10 இலட்சம் முஸ்லிம் வாக்குகள் திசைக்காட்டிக்கு அளிக்கப்பட்டுள்ளது. நாடு முழுவதும் அளிக்கப்பட்டுள்ள வாக்கு விபரங்களை நுணுகி ஆராய்கின்ற போது, இந்த உண்மையை விளங்கிக் கொள்ளலாம்.

முஸ்லிம்களின் இந்தளவு பெரிய எண்ணிக்கை வாக்குகளைக் கொடுத்து உருவாக்கப்பட்ட இந்த அரசாங்கம் முஸ்லிம் மக்களின் உணர்வுகளையும் புரிந்து செயற்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கூகுள் குரோமுக்கு வந்த சோதனை




டேப்லெட் என டிஜிட்டல் சாதனங்களில் கூகுள் குரோம் இன்டர்நெட் பிரவுசரை பயன்படுத்துவதை வழக்கமாகக் கொண்டிருப்பார்கள். இந்த நிலையில் அந்த பிரவுசரை கூகுள் விற்பனை செய்ய வேண்டிய சூழல் எழுந்துள்ளது. அதற்கான காரணம் என்ன என்பது குறித்துப் பார்ப்போம்.

கூகுள் நிறுவனம் சட்டவிரோதமாக Search சந்தையை குரோம் பிரவுசர் மூலம் ஏகபோகமாக்கியது என கடந்த ஆகஸ்ட் மாதம் தீர்ப்பளித்திருந்தார் அமெரிக்க நீதிபதி. இந்நிலையில், அந்த நீதிபதியின் மூலமாகவே கூகுள் குரோம் பிரவுசரை விற்பனை செய்ய வேண்டும் என சொல்ல அமெரிக்க நீதித்துறை அறிவுறுத்த உள்ளதாகத் தெரிகிறது.

இது குறித்து அமெரிக்க நீதித்துறை கருத்து எதுவும் சொல்ல மறுத்து விட்டது. சட்ட சிக்கல்களை எல்லாம் கடந்து இந்த விவகாரத்தில் தீவிரமான நடவடிக்கையை அரசு தரப்பு மேற்கொள்ள முயல்வதாக கூகுள் தரப்பில் லீ-ஆன் தெரிவித்துள்ளார். மேலும், இதனால் பயனர்கள் அதிகம் பாதிக்கப்படுவார்கள் என்றும் கூகுள் தெரிவித்துள்ளது.

பெரிய டெக் நிறுவனங்களின் ஏகபோகம் குற்றச்சாட்டின் கீழ், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நிர்வாகம் மேற்கொண்டுள்ள கடுமையான நகர்வுகளில் ஒன்றாக இது பார்க்கப்படுகிறது. இருப்பினும், இந்த வழக்கில் பெரிய அளவிலான தாக்கம் ஏதும் வரும் நாட்களில் இருக்காது என்றே எதிர்பார்க்கப்படுகிறது. ஏனெனில், ஜனாதிபதி தேர்தலில் ட்ரம்ப் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்த விவகாரத்தில் அமெரிக்க அரசு சற்று நிதானமாக முடிவு செய்யும் என தெரிகிறது.

# ‘கற்கோவளம்’ இராணுவ முகாமை அகற்ற கோரிக்கை



வடமராட்சி வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட கற்கோவளம் கடற்கரையுடன் அண்டிய பகுதியில் மூன்று சகோதரர்களும் சொந்தமான குறித்த காணி இரு தடவைகள் இராணுவ முகாமுக்குச் சுவீகரிக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போது அரசியல் தலைவர்கள், காணி உரிமையாளர்களுடன் இணைந்து போராடி அளவீட்டுப் பணியைத் தடுத்து நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1995ஆம் ஆண்டு முதல் குறித்த இராணுவ முகாம் குறித்த இடத்தில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# “அனுர மாயாஜால வித்தகர்”

மேலும் அவர் தெரிவித்ததாவது,

இலங்கை பொதுத்தேர்தல் வரலாற்றில் தனித்த அரசியல் கட்சி ஒன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனித்து வெற்றி பெற்றுள்ளமை இதுவே முதல் தடவையாகும். ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க வடக்கு மற்றும் கிழக்கு மக்களின் ஆதரவை முழுமையாக வென்று வரலாற்றில் இடம் பிடித்துள்ளதை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஜனாதிபதித் தேர்தலைக் காட்டிலும் பொதுத்தேர்தலில் அதிகளவான வாக்குகளைப் பெற்று அமோக வெற்றி பெற்றுள்ளது. நான் மாயாஜால வித்தைக்காரரல்ல என்று ஜனாதிபதி குறிப்பிட்டமை முற்றிலும் பொய்யானது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் ஆதரவைப் பெற்றுள்ள ஜனாதிபதி உண்மையில் மாயாஜால வித்தைக்காரர் என்றே குறிப்பிட வேண்டும்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க ஒட்டுமொத்த மக்களின் ஆதரவையும் பெற்று ஒருமைப்பாட்டை உறுதிப்படுத்தி உள்ளதற்கு நன்றியும், அரசாங்கத்துக்கு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். அரசாங்கத்தை கைப்பற்றுவதற்காகப் பொதுத்தேர்தலில் நாங்கள் போட்டியிடவில்லை. ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தேசிய மக்கள் சக்தி தலைமையிலான அரசாங்கம் தோற்றம் பெற வேண்டும் என்பதையே தொடர்ந்து வலியுறுத்தினோம்.

இந்த மாதம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய 2025 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தை 2025 மார்ச் மாதத்துக்குப் பின்னர் சமர்ப்பிப்பதாக அரசாங்கம் குறிப்பிட்டுள்ளது. சர்வதேச நாணய நிதியத்தின் செயற்திட்டத்திலிருந்து விலகி பொருளாதார நெருக்கடிகளை தோற்றுவிப்பதா ? அல்லது செயற்திட்ட பரிந்துரைகளைச் செயற்படுத்தி அரசியல் நெருக்கடிகளைத் தோற்றுவிப்பதா? என்பதில் ஒன்றை அரசாங்கம் தீர்மானிக்க வேண்டும்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை எதிர்வரும் ஜனவரி மாதம் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தேர்தலில் தோல்வியடைந்ததை ஏற்றுக் கொள்கிறேன். எளிமையான வாழ்க்கையை வாழ்கிறேன். கிழமையில் இரண்டு நாட்கள் நீதிமன்றத்துக்கு செல்வேன். மிகுதி நாட்கள் செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபடுவேன் என்றார்.

# ரவியின் வீட்டுக்கு பொலிஸ் பாதுகாப்பு

இவ்வாறு அவரது பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டமைக்கு எதிர்ப்பு வெளியாகிவரும் நிலையில், இந்த பாதுகாப்பு போடப்பட்டிருப்பதாக தெரியவருகிறது.

இந்நிலையில், ஏதேனும் அசம்பாவிதம் ஏற்படும் அச்சம் நிலவுவதால் ரவி கருணாநாயக்கவின் வீட்டிற்கு முன்பாக பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# “கறையான் அரிப்பது...

என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ரெலோ கட்சியின் செயலாளருமான சங்கு சின்ன வேட்பாளருமான கோ.கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பு - வாவிக்கரை வீதியிலுள்ள அவரது காரியாலயத்தில் இன்று செவ்வாய்க்கிழமை (19) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியதாவது, மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்து முடிந்த பாராளுமன்ற தேர்தலிலே ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி சார்பில் போட்டியிட்ட எனக்கும் எனது குழுவினருக்கும் ஆதரவு நல்கிய தமிழ்த் தேசியத்தை நேசிக்கும் மக்கள் அனைவருக்கும் இதயப்பூர்வமான நன்றிகள்.

இது எமக்குத் தோல்வி அல்ல, எமக்கு ஏற்பட்ட சிறு சறுக்கலே ஆகும். இந்த சறுக்கலில் இருந்து பாடம் கற்று, மீள் எழுச்சி பெறுவது எங்களது நோக்கமாகும். ஒரு காலத்தில் ஆட்சி செய்த தேசிய கட்சிகளே அடுத்துத் தேர்தலில் தோல்வி கண்ட வரலாறுகள் இருக்கின்றது. 1970ஆம் ஆண்டு ஆட்சி செய்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, 1977ஆம் ஆண்டு வெறும் 8 ஆசனங்களுடன் பாராளுமன்றம் சென்ற வரலாறு இருக்கின்றது. அதேபோன்று, 2020ஆம் ஆண்டு 3 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் இருந்த தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) இன்று 159 ஆசனங்களை மூன்றில் இரண்டு பெரும்பான்மைக்கு மேலாக ஆட்சி அமைத்த வரலாறும் இருக்கின்றது.

எனவே, எமக்கு இது தோல்வி அல்ல, அடுத்த வெற்றிக்கான பலமான வலுவான அத்திவாரத்தை இடும் ஒரு வாய்ப்பாகத்தான் இதனைப் பார்க்கின்றோம் எமது இலக்கு நோக்கிய இலட்சிய பயணம் எட்டும் வரை தொடர்ந்து கொண்டே இருக்கும்.

தோல்வியில் திகழ்வது வரலாறு. எம்மைபோன்ற போராளிகளுக்கு எப்போதும் இருந்ததில்லை, தோல்வியை வெற்றியாக்குவது தான் எங்களது இலட்சியம், அந்த இலட்சியம் தொடர்ந்து கொண்டே இருக்கும். வடக்கு-கிழக்கிலே ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி அனைத்து மாவட்டங்களிலும் போட்டியிட்டது. திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் பிரதிநிதித்துவத்தைத் தக்க வைப்பதற்காக இணைந்து போட்டியிட்டோம். அந்தவகையில், எங்களுக்கு கணிசமானளவு மக்கள் ஆதரவு வழங்கியுள்ளனர்.

எதிர்காலத்தில் தமிழ் மக்கள் இணைந்து செயற்படாவிட்டால், தமிழ்த் தேசியம் விட்டுப்போகும் என்பதைச் சிந்தித்து அனைவரும் செயற்படவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

கடந்த காலங்களில் ஆட்சி செய்த அரசாங்கங்கள், தமிழ்த் தேசியத்துடனும் தமிழ் மக்களுடனும் தமிழ் கட்சிகளுடனும் நேரடியான மோதலிலே ஈடுபட்டனர். அதேபோன்று அவர்களது ஆட்சி வேறு விதமாக இருந்தது.

ஆனால், தற்போது அட்சி அமைத்துள்ள அரசாங்கம், அதன் ஜனாதிபதி, அந்த கட்சி தமிழ்த் தேசியத்தையும் தமிழ்மக்களின் பிரச்சினைகளையும் கறையான் அரிப்பது போன்று உள்ளதால் அழித்துக் கொண்டு செல்கின்றது. எனவே, எங்களது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க வேண்டுமானால், நாங்கள் எங்களுக்குள் இருக்கும் விருப்பு வெறுப்புக்களுக்கு அப்பால் தொடர்ந்து அனைவரும் ஒன்றிணைந்து செயற்படவேண்டும். இல்லாவிட்டால் எமது மக்களின் எதிர்காலம் சூனியமாகும் என்பதில் எந்த மாற்று கருத்தும் இல்லை.

ஜனாதிபதி தேர்தலில் சங்கு சின்னம் வடக்கில் மாத்திரம் அல்ல, கிழக்கிலும் கணிசமான வாக்குகளைப் பெற்றது. குறிப்பாக மட்டக்களப்பில் 37 ஆயிரம் வாக்குகள் சங்கு சின்னத்துக்குக் கிடைக்கப் பெற்றது. இந்த தேர்தலில், 14 ஆயிரத்துக்கு மேற்பட்ட வாக்குகளைப் பெற்றிருக்கின்றது இதற்குப் பல காரணங்கள் உண்டு. சங்கு சின்னத்தில் ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்ட பா.அரியேந்திரன் சங்கு சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டாம் என தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டிருந்தார் அப்படிப்பட்ட பல காரணங்களால் சங்கு சின்னத்துக்குக் கிடைக்க வேண்டிய ஆதரவு கணிசமானளவு குறைந்துள்ளது.

மாற்றம் முழு நாட்டிலும் ஏற்பட்டுள்ளது. 3 ஆசனங்களுடன் இருந்த தேசிய மக்கள் சக்தி 159 ஆசனங்களைப் பெற்றதுடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் 51 ஆயிரம் வாக்குகளைப் பெற்றுள்ளது. அத்துடன், வடக்கு கிழக்கில் 12 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

அதேவேளை, எதிர்வரும் தேர்தல்களில் நான் போட்டியிடமாட்டேன். நடந்து முடிந்த இந்த தேர்தலில் போட்டியிட மாட்டேன் என்று தெரிவித்தேன். இருந்தபோதும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இருந்து தமிழரசு கட்சி வெளியேறியதன் காரணமாக ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணிக் கட்சிகளின் அழுத்தம் மற்றும் மட்டக்களப்பில் தலைமை தாங்கி செயற்பட வேண்டிய காரணமாக நான் இந்த தேர்தலில் போட்டியிட்டிருந்தேன்.

அந்தவகையில், கூட்டணியின் தேசிய அமைப்பாளர் என்ற வகையில் அனைத்து வடக்கு கிழக்கு தமிழ் மக்களுக்கு நன்றிகள் அதேவேளை மீண்டும் எம்மை ஆதரித்தோர் விமர்சித்தோர் எள்ளிநகையாடியோர் அனைவருக்கும் இதயப்பூர்வமான நன்றிகள் என்றார்.

# புலிகளின் முக்கிய தளபதிகள் பாவித்த துப்பாக்கியா?

குறித்த கைதான சந்தேக நபர் 51 வயது மதிக்கத்தக்க முன்னாள் ஒய்வுபெற்ற இராணுவ சிறப்புப் படை வீரர் என்பதுடன் அவரது வீட்டுக் காணியில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் 9 எம்.எம். துப்பாக்கி மற்றும் 143 தோட்டாக்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. அத்துடன், மீட்கப்பட்ட துப்பாக்கியின் இலக்கம் அழிக்கப்பட்டுள்ளதுடன், சந்தேக நபர் தொடர்பிலும் அவர் வசம் மீட்கப்பட்ட துப்பாக்கி தொடர்பிலும் பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த துப்பாக்கியைப் போர் நடைபெற்ற வேளை, வட பகுதியில் கடமையில் இருந்து சந்தேகநபர் எடுத்து வந்தாரா? அல்லது விடுதலைப் புலிகளின் முக்கிய தளபதிகள் பாவித்த துப்பாக்கியா? அல்லது இராணுவ களஞ்சிய சாலையில் இருந்து பெறப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதா? அல்லது பல்வேறு குற்றச் செயலுக்காக எடுத்து வரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டதா? என பல கோணங்களில் மேலதிக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

பொலிஸ் விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி சட்டத்தரணி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் வருண ஜயசுந்தரவின் பணிப்புரையின் பிரகாரம் அம்பாறை வலய கட்டளை அதிகாரி பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ். பி.குணசிறியின் வழிகாட்டலில் அம்பாறை முகாமின் பதில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் டபிள்யூ.பி.சம்பத்குமார அம்பாறை விசேட அதிரடிப்படை முகாமின் பதில் முகாம் கட்டளை அதிகாரி பொலிஸ் பரிசோதகர் அமில நிரோஷன் ஜயசிங்க உப பொலிஸ் பரிசோதகர்

எச்.எம்.எஸ்.ரத்நாயக்க பொலிஸ் சார்ஜன்ட்டுகளான ஹேரத் (9,482) ரத்நாயக்க (69208) ஜயசிங்க (70,820) பொலிஸ் உத்தியோகத்தர்களான மானலே (87290) யசரத்ன (87,810) குணரத்ட (25,132) உள்ளிட்ட அதிகாரிகள் இச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.



# “மீண்டும் வருவார்”

மலர் வீதியில் நடைபெற்ற தேசிய ஜனநாயக முன்னணியின் கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த போது, தேசிய பட்டியல் மூலம் விஜேசேகரவை நியமிக்குமாறு தேசிய ஜனநாயக முன்னணியின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நெறிமுறையற்ற நடவடிக்கையில் ஈடுபட்டதாக முன்னாள் எம்.பிக்கள் குற்றம் சுமத்தியுள்ள ரவி கருணாநாயக்கவை ஐக்கிய தேசியக் கட்சி விரைவில் சமாளிக்கவுள்ளது.

# பரிசளிப்பு விழா

■ வ.சக்தி

மட்டக்களப்பு - களுதாவளை பொது நூலகம் மற்றும் வாசகர் வட்டமும், இணைந்து நடத்திய தேசிய வாசிப்பு மாத பரிசளிப்பு விழாவானது களுதாவளை பொது நூலக கேட்போர் கூடத்தில் செவ்வாய்க்கிழமை (19) நடைபெற்றது.

இதன்போது, வாசிப்பின் மகத்துவம் தொடர்பான பேச்சுக்கள் நடைபெற்றதோடு, மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

மேலும், வாசகர் வட்டத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டது. வீட்டில் நூலகம் ஒன்றை நடத்தி வரும் ஒருவரும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

களுதாவளை பொது நூலக உதவியாளர் வ.கிருபாகரனின் ஒழுங்கமைப்பில், வாசகர் வட்டத்தின் தலைவர் இ.கோபாலபிள்ளையின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், மண்முனை தென் எருவில்பற்று பிரதேச சபையின் செயலாளர் ச.அறிவழகன் பிரதம அதிபதியாகக் கலந்து கொண்டிருந்தார். மேலும், இதன்போது மட்டக்களப்பு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் எஸ். குகநேசன் மற்றும் ஆலயங்களின் நிர்வாகத்தினர், அதிபர்கள், பாடசாலை மாணவர்கள், வாசகர் வட்டத்தினர் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.










# "அனுபவம் முக்கியம்"

"அரசாங்கத்தை பொறுப்புக்கூறச் செய்வதற்கு நடந்து கொண்டிருக்கும் சீர்திருத்தங்களில் அனுபவம் வாய்ந்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பது முக்கியமானதாகும்" என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்டத்தில் இருந்து பாராளுமன்றத்துக்கு இம்முறை தெரிவு செய்யப்பட்ட உறுப்பினருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்

தனது சமூக வலைத்தளங்களினுடான பதிவுகளிலேயே அவர் இவ்வாறு கருத்து பகிர்ந்துள்ளார்.



மேலும் அவர் தெரிவிக்கையில், "பாராளுமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் அதிகூடிய பெரும்பான்மையைக் கருத்தில் கொண்டு, அரசாங்கத்தை பொறுப்புக் கூறச் செய்வதற்கு நடந்து கொண்டிருக்கும் சீர்திருத்தங்களில் அனுபவம் வாய்ந்த எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருப்பது முக்கியமான ஒன்றாகும்.

புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப் பட்டியல் ஆசனமானது காஞ்சன விஜயசேகரவுக்கு வழங்கப்படும் என நான் நம்புகின்றேன்.

குறிப்பாக எமது நாட்டின் வரலாற்றில் எரிசக்தி துறையில் மிகவும் குறிக்கோளான மற்றும் கடினமான சீர்திருத்தங்களுக்குக் காஞ்சன அவர்கள் தலைமை தாங்கினார். நமது எரிசக்தி துறையில் போட்டி, நியாயமான விலை நிர்ணயம் மற்றும் மக்களுக்கான பொறுப்புக்கூறல் ஆகியவற்றுக்கு அவர் திடமான திட்டங்களை அமைத்தார். அவர் எடுத்த முடிவுகளின் அரசியல் விளைவு தனக்கு நல்லதாக இருக்காது என்பதை அறிந்தே இதையெல்லாம் செய்தார். காஞ்சன தனது தேர்தல் வாய்ப்புகளைப் பணயம் வைத்து மேற்கொண்ட சீர்திருத்தங்களின் இறுதி வெற்றியாளர்கள் இலங்கை நுகர்வோராக இருப்பார்கள்.

இன்று, இலங்கையர்கள் எரிபொருளை வாங்கும் போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் அல்லது இந்திய எண்ணைக் கூட்டுத்தாபனத்திற்கு இனி கட்டுப்படுவதில்லை.

அதேபோல், மின்சாரச் சட்டத்தில் அவரது சீர்திருத்தங்களை நாம் பின்பற்றினால், இலங்கை மின்சார சபை இன் அதிக விலைகள் மற்றும் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு ஆகியவற்றால் இலங்கையர்கள் சிக்க மாட்டார்கள்.

தொலைத்தொடர்பு மற்றும் எரிபொருளைப் போலவே, இலங்கையர்கள் தங்கள் ஆற்றல் வழங்குநரைத் தேர்ந்தெடுப்பதற்கும் ஏகபோகங்களிலிருந்து விடுபடுவதற்கும் தகுதியானவர்கள்" எனவும் தெரிவித்துள்ளார்.

## வாகன விபத்தில் மாணவர்கள் படுகாயம்



பாடசாலை மாணவன் ஓட்டிச் சென்ற முச்சக்கரவண்டி பிரதான வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த மூன்று மாணவர்கள் படுகாயமடைந்து நாவலப்பிட்டி மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் திங்கட்கிழமை (18) மாலை கினிகத்தேன - நாவலப்பிட்டி பிரதான வீதியில் இடம்பெற்றுள்ளது.

கினிகத்தேன-கடவல தமிழ் மகா வித்தியாலத்தில் 12ஆம் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களே இவ்வாறு காயமடைந்துள்ளனர்.

பாடசாலையில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் குறித்த நான்கு மாணவர்களும் முச்சக்கரவண்டியில் தனது வீடுகளுக்குச் சென்று கொண்டிருந்த நிலையில், வளைவான பகுதியொன்றில் வைத்து அதே திசையில் பயணித்த வேனை கவனமின்றி கடந்து செல்ல முற்பட்ட போது எதிர் திசையில் வந்த நாவலபிட்டி - கினிகத்தேன வீதி பேருந்துடன் மோதியதில் முச்சகரவண்டி கவிழ்ந்துள்ளது.

இதன் போது பிரதான வீதியில் விழுந்த மூன்று மாணவர்களின் உயிரைக் காப்பாற்றுவதற்காக இ.போ.ச. பேருந்தின் சாரதி பேருந்தை வீதியை விட்டுச் செலுத்தியதில் அரசாங்கத்திற்கு சொந்தமான கட்டிட மொன்றின் மதில் மற்றும் வாயிலில் மோதி பேருந்து நின்றதாகவும், பேருந்தில் பயணித்த எவருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கர வண்டியை ஓட்டிச் சென்ற பாடசாலை மாணவன் தன்னிடம் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளதாக தெரிவித்த போதிலும், இதுவரை பொலிஸாரிடம் சமர்ப்பிக்கப்படவில்லை எனவும் பாடசாலை மாணவனின் கவனக்குறைவாக வாகனம் செலுத்தியமை விபத்துக்கு காரணம் எனவும் கினிகத்தேனை பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## இடிந்து விழுந்த வீடு

■ மஹிந்த குமார்

இரத்தினபுரி, பலாங்கொடை மற்றும் அதனை அண்மித்த பல பகுதிகளில் திங்கட்கிழமை(18) பிற்பகல் முதல் நள்ளிரவு வரை பெய்த இடியுடன் கூடிய கடும் மழையினால் தெத்தனகல, கீழ் பிரிவு தோட்டத்தில் உள்ள மண் வீடொன்று இடிந்து விழுந்துள்ளது.

குறித்த வீட்டில் கடந்த 15 வருடங்களாக இரண்டு பிள்ளைகளுடன் தாய் தந்தை வாழ்ந்த வந்ததாகவும் தற்போது தாய் வெளிநாட்டில் பணிபுரிந்து வருகின்ற நிலையில், இரண்டு பிள்ளைகளுடன் தந்தை குறித்த வீட்டில் வாழ்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

வீடு இடிந்து விழும் போது, வீட்டில் தனது மூத்த மகனும் இரண்டு ஆடுகளும் இருந்துள்ளதாகவும் இதில் யாருக்கும் பாதிப்பு ஏதும் ஏற்படவில்லை என தந்தை கூறியுள்ளார்.



இருந்த போதிலும் வீட்டின் அனைத்து பொருட்களும் சேதமடைந்துள்ள நிலையில் தற்போது குறித்த வீட்டார் தற்காலிகமாக உறவினர்கள் வீட்டில் தங்கியுள்ளனர்.

## கசிப்புடன் 30 பேர் கைது


■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல இடங்களில் பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பின் போது கசிப்பு போதைப்பொருளுடன் 30 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

காத்தான்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஆரையம்பதி , தாழங்குடா, புதுக் குடியிருப்பு, நாவற்குடா, கல்லடி, கிரான்குளம் உட்பட பல இடங்களில் குறித்த திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் போது கசிப்பு விற்பனை செய்யும் இடங்கள், கசிப்பு உற்பத்தி நிலையங்கள் என்பன சுற்றிவளைக்கப்பட்டது. மறைத்து வைக்கப்பட்ட மற்றும், விற்பனை செய்யப்பட்ட நிலையில் சுமார் 150 லீற்றர் கசிப்பு கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், 30 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும்



பெருமளவிலான உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேலும், கைது செய்யப்பட்ட நபர்கள் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்னிறுத்தப்பட உள்ளதாக காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## அறிவோர் ஒன்றுகூடல்

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணைத்தலைவர் த.அரியரத்தினம் தலைமையில் புதன்கிழமை(20) மாலை 5.30 மணிக்கு சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறவிருக்கும் அறிவோர் ஒன்றுகூடல் நிகழ்ச்சியில் 'நுண்கடன்களும் மக்களும்' என்னும் தலைப்பில் கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் துணை நிதிச் செயலாளர் பா.நந்தகுமார் உரை நிகழ்த்தவுள்ளார்.

## குடும்ப சுகாதார உத்தியோகத்தர் வன்புணர்வு

ஹம்பாந்தோட்டையில் , குடும்ப சுகாதார உத்தியோகத்தரை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பில் சாரதி ஒருவர் திங்கட்கிழமை (18) கைது செய்யப்பட்டுள்ளார்.



கடந்த ஜூலை மாதத்தின் பின்னர் ஒரு நாள் ஹம்பாந்தோட்டை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்தில் வைத்து திருமணமாகாத குடும்ப சுகாதார உத்தியோகத்தரான பெண்ணை பாலியல் வன்கொடுமை செய்த சம்பவம் தொடர்பாகப் பாதிக்கப்பட்ட பெண் ஹம்பாந்தோட்டை பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

அதன்படி, அதே அலுவலகத்தில் சாரதியாக பணிபுரியும் அங்குனகொலபெலஸ்ஸ பிரதேசத்தைச் சேர்ந்த 45 வயதுடைய சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## ரயிலில் மோதி மாணவன் பலி

கம்பஹா ரயில் நிலையத்தில் இருந்து கொழும்பு நோக்கிப் பயணித்துக் கொண்டிருந்த ரயிலில் மோதி 16 வயதுடைய பாடசாலை மாணவன் உயிரிழந்த சம்பவம் திங்கட்கிழமை (18) இடம்பெற்றுள்ளது.

கம்பஹாவில் உள்ள பாடசாலை ஒன்றில் 11ஆம் தரத்தில் கல்வி கற்கும் குறித்த மாணவன் கம்பஹா, பஹலகம பிரதேசத்தில் ஐந்து பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் ஐந்தாவது பிள்ளையாவார்.

இச் சம்பவம் தொடர்பில் கம்பஹா தலைமையக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், மாணவனின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக கம்பஹா மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

## சந்திப்பு



வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகனை இலங்கை கடற்படையின் வட பிராந்திய கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் துஷார கருணதுங்க, மரியாதை நிமித்தமாக ஆளுநர் செயலகத்தில் வைத்து திங்கட்கிழமை (18) சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இச்சந்திப்பின்போது, யாழ். தீவுப் பகுதி மக்களின் கடல் மார்க்க போக்குவரத்து மற்றும் தீவுகளில் வசிக்கும் மக்களுக்கான வசதி வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு இலங்கை கடற்படை முன்னெடுத்துள்ள செயற்பாடுகளின் முக்கியத்துவம் தொடர்பாகவும் ஆராயப்பட்டுள்ளது.

## மாணவிகளை வன்புணர்ந்த கணித ஆசிரியர் கைது

பாடசாலை மாணவிகள் இருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் கணித பாடம் ஆசிரியர் திங்கட்கிழமை (18) மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி, எல்பிட்டிய பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்றும் 54 வயதுடைய கணித ஆசிரியரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபர் தனது பாடசாலையில் கல்வி கற்கும் மாணவிகளுக்கு மேலதிக வகுப்புகளை நடத்தி வருகின்ற நிலையில் இரு மாணவிகளை பாலியல் வன்புணர்வு செய்துள்ளார். இது குறித்து பாதிக்கப்பட்ட மாணவிகளின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளனர்.

# எல்லை மீறிய அதிகாரம் ஆபத்தானது

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சி பீடமேறியுள்ள ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி கட்சி, நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தாம் எதிர்பார்த்ததை விட மக்கள் தம்மீது அதீத நம்பிக்கை கொண்டு அளவுக்கதிகமான அதிகாரத்தை வழங்கியுள்ளதாகத் தெரிவித்துள்ளது. அமைச்சரவை நியமனத்தைத் தொடர்ந்து அவர்கள் மத்தியில் ஜனாதிபதி உரையாற்றும் போதும், தேர்தலில் வெற்றியீட்டியதைத் தொடர்ந்து, மக்கள் விடுதலை முன்னணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா ஊடகங்கள் மத்தியில் உரையாற்றும் போது, இந்த விடயம் தொடர்பில் கருத்துகளை வெளியிட்டிருந்தனர்.

கடந்த காலங்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்துடன் ஆட்சி பீடமேறிய அரசாங்கங்கள் நீண்ட காலம் நிலைத்திருக்கவில்லை. அதற்கு மாறுபட்ட காரணங்கள் இருந்தாலும், அந்த அரசாங்கங்களில் பல கட்சிகள் இணைந்து கூட்டாகச் செயலாற்றியிருந்தன. இதனால், அவற்றுக்கிடையே முரண்பாடு எழுந்த போது பிரிவடைந்து எதிர்த்தரப்பில் அமர்ந்ததை அவதானிக்க முடிந்திருந்தது. அத்துடன், தமக்கிடையிலான இந்த முரண்களைத் தீர்ப்பதிலும், தமது சுய இலாபங்களிலும் அவை அதிகளவு அக்கறை கொண்டிருந்ததுடன், பொது மக்களுக்கு நிரந்தர தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் பெருமளவில் அக்கறை கொண்டிருக்கவில்லை.

எவ்வாறாயினும், இந்த புதிய தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் மீது பொது மக்கள் மத்தியில் தற்போது ஒருவித வரவேற்பு காணப்பட்டாலும், காலப்போக்கில் பழகப் பழகப் பாலும் புளிக்கும் என்பதற்கமைய, இந்த அரசாங்கத்தின் மீதும் மக்களுக்கு வெறுப்பு எழலாம். அதில் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகள் பெருமளவு தாக்கம் செலுத்தும். தற்போது தமது பயணத்தை ஆரம்பிக்கும் இந்த அரசாங்கம், மக்களுக்கான நன்மைகளையும், நிவாரணங்களையும் பெற்றுக் கொடுப்பதில் ஆரம்பம் முதல் கவனம் செலுத்தி, அவற்றைச் செயற்படுத்துவதினூடாக மக்களின் நம்பிக்கையை மாறாமல் பேண முடியும்.

எனவே, இன்னுமொரு தேர்தல் நெருங்கி வரும் வரை அல்லது மக்கள் மீண்டும் வீதிக்கு இறங்கும் ஒரு நிலை வரும் வரை காத்திருக்காமல், தேர்தல் காலப்பகுதியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவது இந்த அரசாங்கத்தின் கடமை. மக்கள் விழிப்புடன் உள்ளனர். காலாகாலமாக சில அரசியல்வாதிகள் கட்டிக்காத்து வந்த தேர்தல் வாக்குக் கோட்டைகள் தகர்க்கப்பட்டுள்ளன. அவ்வாறு கீழ்மட்டத்திலிருந்து இந்த நிலைக்கு உயர்ந்துள்ள தேசிய மக்கள் சக்தியும் இந்த யதார்த்தத்தை உணர்ந்து செயலாற்றும் என்பது கட்சியின் அங்கத்தவர்களின் ஆரம்பக்கட்ட பேச்சுகளினூடாக வெளிப்படுகின்றது.

குற்றமிளைத்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும், அதற்கேற்ற வகையில் சட்டங்கள் அமைய வேண்டும். எதிர்காலத்தில் ஊழல், குற்றங்களைச் செய்ய அச்சமடையச் செய்வதாக அவை இருக்க வேண்டும். எனினும், அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு எனும் பழமொழி இந்த அரசாங்கத்தின் அதிகாரத்திலும் உண்மையாகிவிடாமல் பார்த்துக் கொள்வது சிறந்தது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

தனிமனித ஒழுக்கம் அற்றவன், நேர்மைக்குப் புறம்பானவன் ஆவான். ஆனால், இவர்களே நடிப்புடன் கூடிய வாழ்வில் திறமைசாலிகளாக இருக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் நேர்மைமிகு அரசியல்வாதிகள், தங்கள் நாட்டுக்காகத் தங்களைத் தியாகம் செய்தனர். அவர்கள் மூலம் கிடைத்த அனுகூலத்தை, நேர்மையற்றவர்கள் ஆட்சிக்கு வந்தமையால், நாட்டில் பிரச்சினைகள் வானை முட்டி விட்டன.

வியாபாரத்தில் மோசடி, கல்வியை வியாபாரமாக்குதல், மருத்துவத்தில் சுரண்டல், போதையை நாடுதல், நாகரிகத்தின் பேரால் நடக்கும் சீர்கேடுகள், எல்லாமே ஒழுக்கம் சார்ந்தனவற்றுக்கு எதிரான இழிச் செயல்களில் சில உதாரணங்கள் ஆகும்.

ஆனால், இந்தச் செயல்களுக்குக் காரணமானவர்கள், தங்களை ஒழுக்கம் மிகு மாந்தர்களாகவே காட்டுவதும் உண்டு. இவர்களின் வருமானங்களைப் பார்த்து, சாதாரணமான மக்களும் மனப்புரள்வில் சிக்குவதுண்டு. நிலையான நல்வாழ்வில் தோல்வியில்லை; அமைதி மட்டுமே உண்டு என்பதை உணர்க.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்



எம்.எஸ்.எம்.ஐயூப்

# தமிழ் - முஸ்லிம் மக்கள் இனத்துவ அரசியலை கைவிட்டனரா?

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற பாராளுமன்றத் தேர்தலின் முடிவுகளில் சில அம்சங்களை விளங்கிக்கொள்வது சற்று கடினமாக இருக்கிறது. குறிப்பாக திடீரென தேசிய மக்கள் சக்தி மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தைப் பெற்றுக்கொண்டமையும் திடீரென தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் பெருமளவில் அக்கட்சிக்கு வாக்களிக்க எடுத்த முடிவையும் விளங்கிக் கொள்வது கஷ்டமானதாகும்.

கடந்த செப்டெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுனுமார திசாநாயக்க வெற்றி பெற்றாலும், வாக்கு எண்ணும் போது, அவர் சட்டப்படி முதல் சுற்றிலேயே 50 வீத வாக்குகளைப் பெறவில்லை. அச்சுற்றின் போது, அவர் 56 இலட்சம் வாக்குகளை, அதாவது 42 வீத வாக்குகளையே பெற்றார்.

அது பொதுத் தேர்தலாக இருந்திருந்தால், அரசியலமைப்பின் ஆசன ஒதுக்கீட்டுக்கான சூத்திரத்தின் படி, தேசிய மக்கள் சக்தி மாவட்ட ரீதியாக 78 ஆசனங்களையே பெற்றிருக்கும். மேலதிகமாக அக்கட்சி 15 மாவட்டங்களில் முதலிடத்துக்கு வந்தமையால் 15 போனஸ் ஆசனங்களையும் பெற்றிருக்கும். அத்தோடு, தேசியப் பட்டியல் மூலம் 15 ஆசனங்களையும் பெற்று மொத்தமாக 105 ஆசனங்களையே பெற்றிருக்கும்.

அன்று சஜித் பிரேமதாசவின் தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி இரண்டாவது இடத்துக்கு வந்தாலும், அது பொதுத் தேர்தலாக இருந்தால், தமிழ் கட்சிகள் தனியாகப் போட்டியிடுவதன் காரணமாக அதன் வாக்குகள் மேலும் குறையும் பொதுவாக ஏனைய சகல கட்சிகளும் தேசிய மக்கள் சக்தியை விடக் குறைவாகவே வாக்குகளைப் பெற்றிருக்கும். ஆயினும், தேசிய மக்கள் சக்திக்கு அறுதிப் பெரும்பான்மை பெற முடியாது போயிருக்கும்.

இதனைத் தேசிய மக்கள் சக்தியின் சில தலைவர்கள் உணர்ந்திருந்தார்கள் போலும். எனவே தான், பெரும்பான்மை பலத்துடன் பதவிக்கு வந்தாலும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளுடன் தேசிய ஒற்றுமை அரசாங்கம் ஒன்றை நிறுவத் திட்டமிட்டு இருப்பதாக அமைச்சர் விஜித்த ஹேரத் தெரிவித்திருந்தார்.

ஆயினும், பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி 68 இலட்சத்துக்கு அதிகமான வாக்குகளைப்பெற்று மாவட்ட ரீதியாக போனஸ் ஆசனங்களுடன் 141 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது. தேசியப் பட்டியல் மூலம் அக்கட்சிக்கு 18 ஆசனங்கள் கிடைத்ததால் மொத்தமாக அக்கட்சி 159 ஆசனங்களைப் பெற்றுக்கொண்டது.

இது இலங்கை வரலாற்றில் ஒரு கட்சி தனித்து மூன்றில் இரண்டுக்கு (150 ஆசனங்களுக்கு) மேற்பட்ட அதிகாரத்தைப் பெற்ற முதல் முறையாகும்.

இதற்கு முன்னர் 1970இல் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மையையும் 1977இல் ஜே.ஆர்.ஜயவர்தன தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி ஆறில் ஐந்து பெரும்பான்மையையும் பெற்றன எனினும், அது நாட்டில் உண்மையான மக்கள் அபிப்பிராயத்தைப் பிரதிபலிக்கவில்லை.

அப்போது, விகிதாசார தேர்தல் முறை அமுலில் இருக்கவில்லை. தொகுதிவாரி தேர்தல் முறையே அமுலில் இருந்தது. அந்த தேர்தல் முறை எவ்வளவு மக்கள் அபிப்பிராயத்தை திரிபுபடுத்திக் காட்டுகிறது என்றால் 1970இன் தேர்தலில் ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பெற்று வெற்றி பெற்ற போதிலும், அது தோல்வியடைந்த ஐக்கிய தேசிய கட்சி பெற்ற வாக்குகளின் எண்ணிக்கையை விட குறைந்த வாக்குகளையே பெற்றது.

அதேவேளை, 2010இல் மகிந்தவும் 2020இல் கோட்டாபயவும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கையில் வைத்துக் கொண்டு இருந்தாலும், அவர்களின் கட்சிகள் தனித்து 150 ஆசனங்களைப் பெறவில்லை. பதவிக்கு வந்ததன் பின்னர் அவர்கள் ஏனைய சில கட்சிகளின் உறுப்பினர்களுக்கு இலஞ்சம் கொடுத்து அவர்களின் ஆதரவுடன் 150 ஆசனங்களுடன் பாராளுமன்றத்தை வழிநடத்தினர். எனவே, இம்முறையே ஒரு கட்சி தனித்துத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமாரவுக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஆதரவு அவ்வளவாகக் கிடைக்கவில்லை.

அத்தேர்தலில் அவர் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிவாக வாழும் யாழ்ப்பாணம், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல (அம்பாறை), பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய ஏழு மாவட்டங்களில் பெரும்பான்மை வாக்குகளைப் பெறவில்லை.

ஆயினும், பொதுத் தேர்தலில் அவரது கட்சி, நாட்டின் 22 தேர்தல் மாவட்டங்களில் மட்டக்களப்பு தவிர்ந்த ஏனைய 21 மாவட்டங்களிலும் பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலில் 57 இலட்சம் வாக்குகளைப் பெற்ற அக்கட்சி பொதுத் தேர்தலில் சுமார் 69 இலட்சம் வாக்குகளைப் பெற முடிந்துள்ளது.

குறிப்பாகத் தமிழ்த் தேசியத்தின் மையமாகவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் கோட்டையாகவும் கருதப்படும் யாழ். மாவட்டத்தில் ஜனாதிபதித் தேர்தலில் வெறும் 27,000 வாக்குகளைப் பெற்று நான்காம் இடத்தை அடைந்த தேசிய மக்கள் சக்தி இரண்டு மாதங்களுக்கும் குறைந்த கால இடைவெளியில் அதன் பலத்தை மும்மடங்காக அதிகரித்துக்கொண்டு பொதுத் தேர்தலில் 80,000 வாக்குகளைப் பெற்றுள்ளது.

அம்மாவட்டத்தில் முதலிடத்துக்கு வந்தமையால் அக்கட்சிக்குக் கிடைத்த போனஸ் ஆசனத்துடன் அதற்கு மொத்தம் மூன்று ஆசனங்கள் கிடைத்தன. தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகளுக்கு தலா ஒரு ஆசனம் வீதமே கிடைத்துள்ளது. ஈழப் போரின் மையமாக விளங்கிய வன்னியிலும் அக்கட்சி முதலிடத்துக்கு வந்தது.

ஜனாதிபதித் தேர்தலில் தாம் இழந்த பதுளை மற்றும் நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் மலையக தமிழ் மக்கள் வாழும் சகல தொகுதிகளிலும் அக்கட்சி பெரும்பான்மை வாக்குகளைப் பெற்றுள்ளது.

கிழக்கு முஸ்லிம்களின் இதயமாகக் கருதப்படும் கல்முனையிலும் அக்கட்சி தான் வெற்றி பெற்றுள்ளது.

சமஷ்டியையோ, வடக்கு கிழக்கு இணைப்பையோ 13ஆவது திருத்தத்தைப் பூரணமாக அமுலாக்கலையோ எதிர்ப்பார்க்க வேண்டாம் என்று அனுரகுமார தொடர்ந்து கூறி வந்த நிலையிலேயே இது நிகழ்ந்துள்ளது.

இதனை வைத்துப் பல சிங்கள அரசியல் விமர்சகர்கள் தமிழ், முஸ்லிம் மக்கள் இனவாதத்தைக் கைவிட்டுள்ளதாகக் கூறுகின்றனர். இன உணர்வையே அவர்கள் இனவாதமாக எடுத்துரைக்கின்றனர்.

இனவாதமாக இருந்தாலும் இன உணர்வாக இருந்தாலும் இரண்டு மாதங்களில் அது மாறுமா? இரண்டு மாதங்களுக்கு முன்னர் இம்மக்கள் இனவாதிகளா? அவ்வாறாயின், புலிகளை அழித்த இராணுவத் தளபதிக்கு வாக்களிக்கப் போர் முடிவடைந்த உடனேயே வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் ஏன் முடிவு செய்தார்கள்? சமஷ்டித் தீர்வுக்கு உடன்படும் கட்சிக்கே நாம் ஆதரவு வழங்குவோம் என கூறிய தமிழ் தலைவர்கள், அதனை மறந்து சஜித் பிரேமதாசவுக்கு வாக்களிக்குமாறு கூறிய போது தமிழ் மக்களும் அதனை ஏற்றுச் செயற்பட்டனர்.

அம்மக்களும் அந்த சமஷ்டித் தீர்வை மறந்து விட்டனரா?

இந்தியாவின் நெருக்குதலால் 1987இல் இணைக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களை 2006இன் வழக்கொன்றின் மூலம் பிரித்த மக்கள் விடுதலை முன்னணியை மையமாகக்கொண்ட தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்க முடியாது என்றதோர் கருத்து கடந்த சில வாரங்களாகத் தமிழ் மக்கள் மத்தியில் பரவலாக விவாதிக்கப்பட்டு வந்தது. தமிழ் மக்கள் அக்கருத்தையும் நிராகரித்துவிட்டனரா?

இந்த மாற்றத்தை இவ்வாறும் பார்க்கலாம். சமஷ்டி, மாகாண இணைப்பு, 13ஆவது திருத்தம் ஆகியவற்றைப் பற்றி மக்கள் விடுதலை முன்னணியும் பிற்காலத்தில் தேசிய மக்கள் சக்தியும் எந்த நிலைப்பாட்டை எடுத்தாலும், ஊழலற்ற அரசியல் கலாசாரத்தை கட்டியெழுப்ப அக்கட்சிகள் எடுத்த முயற்சியின் நேர்மையைச் சகல இன மக்களும் இத்தேர்தல்களுக்கு முன்னரே அறிந்து ஏற்றுக்கொண்டு இருந்துள்ளனர்.

ஆயினும், அக்கட்சி ஒருபோதும் ஆட்சியைக் கைப்பற்றும் என்று நினைத்தும் பார்க்க முடியாத நிலை இருந்தமையால் அம்மக்களும் அக்கட்சியைப் புறக்கணித்து ஏனைய ஊழல் மலிந்த கட்சிகளையே ஆதரித்தனர்.

2022 ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் கொடுமையால் தாம் தழுவியிருந்த அரசியலைப் பற்றி விரக்தியடைந்த தென்பகுதி மக்கள், தமது மரபு ரீதியிலான அரசியல் உடைத்தெறிந்து புதிய அரசியல் பாதையைத் தேடினர்.

ஊழல் மலிந்தவர்கள் வேண்டாம், புதியவர்களே வேண்டும் என்ற காலிமுகத்திடல் போராட்டக்காரர்களின் சுலோகத்தை அம்மக்கள் கைகூப்பிக்கொண்டனர்.

மக்கள் விடுதலை முன்னணியே அப்போது அவர்களின் கண்ணில் பட்டது. அவர்கள் அதனை தழுவிக்கொண்டனர்.

மாற்றம் தொடர்பான இப்புதிய கண்ணோட்டம் பின்னர் தமிழ், முஸ்லிம் மக்களிடையேயும் கசியத் தொடங்கியது.

ஆயினும், மக்கள் விடுதலை முன்னணியினர் உள்ளிட்ட தேசிய மக்கள் சக்தியினர் வெற்றி பெறுவார்களா என்ற சந்தேகத்தில் அம்மக்கள் ஜனாதிபதித் தேர்தலின் போது, தயக்கத்தோடு இருந்தனர். தமது அந்த நிலைப்பாட்டை நியாயப்படுத்த பல்வேறு காரணங்களையும் முன்வைத்தனர்.

ஜனாதிபதித் தேர்தலில் அனுரகுமார வெற்றி பெறவே, அவர்களது மன மாற்றம் வேகமடைந்தது. அவ்வெற்றி மட்டுமல்லாது, வெற்றி பெற்றவர்களின் நடவடிக்கைகளும் மக்களைக் கவரலாயின. இதனைத் தமிழ் மற்றும் முஸ்லிம் தலைவர்களும் உணர்ந்தனர். தெற்கில் உருவாகியிருக்கும் மாற்றத்துக்கான அலையில் தமிழ்த் தேசியம் கறைந்து விடக் கூடாது என்று தமிழ் தலைவர்கள் கூறினர்.

மாற்றத்தின் பெயரால் முஸ்லிம் தலைமையைத் தூக்கியெறியக் கூடாது என்று முஸ்லிம் தலைவர்கள் கூறினர். ஆனால், மக்கள் மாற்றத்தை நோக்கி ஈர்க்கப்பட்டார்கள். இப்போதைக்கு இவ்வாறு தான் இந்த தேர்தல் முடிவைப் பார்க்க முடியும்.

## கடிதங்கள்

### வீதியை புனரமையுங்கள்



கிளிநொச்சி - பரந்தன், முல்லைத்தீவு ஏ-35 வீதியின் வெலிக்கண்டல் சந்தியிலிருந்து கண்டாவளை செல்லும் பிரதான வீதியின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் விடப்பட்டுள்ளதாக கைவிடப்பட்டுள்ளதால் மக்கள் போக்குவரத்தில் பெரும் சிரமங்களை நோக்கி வருவதாகவும், தெரிவிக்கப்படுகிறது.

இது குறித்து அதிகாரிகளிடம் தெரிவித்தும், அவர்கள் நடவடிக்கைகள் மேற்கொள்ளவில்லையென அப்பகுதி மக்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

– யது பாஸ்கரன்

# “வாழ்க்கையை வளமானதாக மாற்றிக் கொள்ளுங்கள்”

## காரைநகர் தொழிற்பயிற்சி நிலைய தலைமை அதிகாரி துதி ராஜா தெரிவிப்பு



ம.கலைச்செல்வன்,
ஊடக கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



இலங்கையில் பாடசாலைக் கல்வியை முடித்த மாணவர்களுக்கு பல்வேறு பயிற்சி நெறிகளை இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை வழங்கி வருகிறது என பயிற்சி நெறிகள் தொடர்பில் காரைநகர் தொழிற்பயிற்சி நிலைய தலைமை அதிகாரி துதி ராஜா செவ்வி கண்ட   தெரிவித்தார்.

அவரிடம் நடத்திய நேர்காணலை, கேள்வி பதிலாகத் தருகிறோம்.

**கேள்வி: பாடசாலை கல்வியை முடித்த மாணவர்களுக்கு மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஏன் அவசியம்?**

பதில்: ஆரம்பக் காலத்தில் தொழிற்பயிற்சி என்று மாத்திரம் தொழில்நுட்ப கல்லூரியில் பயிற்சிகள் வழங்கப்பட்டன ஆனால் சர்வதேச ரீதியில் தரம் மிக்கதாகத் தொழில் வாய்ப்புகளைப் பெறக்கூடிய வகையில் தொழிற்பயிற்சிகள் இளம் தலைமுறைக்கு வழங்க வேண்டிய தேவை தற்போதைய காலகட்டத்தில் ஏற்பட்டுள்ளது. சாதாரணமாகச் சிறிய தொழில்கள் கூட தொழிற்பயிற்சியாக மாறிவிட்டன. சர்வதேச ரீதியாக தொழில் தரத்தை இன்று சர்வதேசம் எதிர்பார்த்திருக்கிறது.

எனவே, பாடசாலைக் கல்வியை விட்டு இடைவிலகிய மாணவர்கள் மூன்றாம் நிலை தொழிற்கல்வி நிலையங்களில் தங்களுக்குப் பிடித்த தொழில் பயிற்சிகளை NVQ ஊடாக பெற்று தனிநபர் அபிவிருத்திக்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பங்களிப்பதற்கு மூன்றாம் நிலை தொழிற்கல்வி அவசியமாகிறது.

**கேள்வி: மூன்றாம் நிலை தொழிற்கல்வி வழங்குவதில் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபை பிரதானமானது (VTA) அந்த வகையில் நீங்கள் வழங்குகின்ற பிரதான தொழில் பயிற்சிகள் எவை?**

பதில்: யாழ்ப்பாணத்தில் ஆறு பிரதான தொழிற்பயிற்சி நிலையங்களினூடாக 30க்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

யாழ்ப்பாண மாவட்ட தொழிற்பயிற்சி மையம் ,காரைநகர் தொழிற்பயிற்சி மையம், கைதடி தொழிற்பயிற்சி மையம், பண்டத்தரிப்பு தொழிற்பயிற்சி மையம், சுன்னாகம் தொழிற்பயிற்சி மையம், வல்வெட்டித்துறை தொழிற்பயிற்சி மையம் ஆகியவற்றின் மூலம் பயிற்சி நெறிகள் வழங்கப்படுகின்றன.

அவற்றுள் பிரதானமாகச் சுற்றுலாத் துறை சார்ந்த பயிற்சி நெறிகளான உணவு மற்றும் குளிர்பானம் பரிமாறுபவர் மற்றும் வெதுபாளர் (Baker) சமையலாளர் (Professional cookery) வரவேற்பாளர், அறை பராமரிப்பாளர் போன்ற கற்கைநெறிகள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலாளர், கணினி வன்பொருள் திருத்துனர், ஆடை வடிவமைப்பாளர் போன்ற 30க்கும் அதிகமான கற்கை நெறிகளுக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு NVQ 4 தரத்திலான தொழிற்தகைமை சான்றிதழ் கற்கை நெறி முடிவில் வழங்கப்படுகின்றன.

**கேள்வி:மூன்றாம் நிலைக் கல்வி என்று சொல்லப்படுகின்ற தொழிற்கல்வியை வழங்குகின்ற ஏனைய அரசாங்க,சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து VTA வழங்கும் பயிற்சி நெறி எவ்வாறு வேறுபடுகின்றது**

பதில்: இலங்கையில் மூன்றாம் நிலை தொழில் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் NVQ தொழிற் சான்றிதழ் வழங்கி வருகின்றன.

ஆனால், வழங்கப்படும் தொழிற் கல்வி சான்றிதழ் ஒன்றாக இருந்தாலும் பயிற்சி நெறிகள் பயிற்றுவிக்கப்படுகிறது முறைகளில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன.

இலங்கை தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையைப் பொறுத்த வரையில் CBT முறை மூலம் தேர்ச்சி அடிப்படையிலான கல்வி முறையாகும். வகுப்பறை பயிற்சி வழங்கப்பட்டு அதன் மூலம் அதற்கான திறனை மாணவர்களுக்கு வழங்கி அதன் பிற்பாடு குறிப்பிட்ட சில கற்கை நெறிகளுக்கு வெளிக்கள பயிற்சி (OJT) வழங்கி அதன் மூலமாக NVQ தொழில் சான்றிதழ் வழங்கும் முறையாகும்.

ஆனால், இலங்கை தேசிய பயிலுநர் பயிற்சி அதிகார சபை (NAITA) போன்ற ஏனைய மூன்றாம் நிலை தொழிற்கல்வி நிலையங்கள் பயிற்சி நெறியைப் பயிலும் மாணவர்களுக்கு ஆரம்பத்திலிருந்தே வெளிக்கள (OJT) பயிற்சிகளை வழங்கி அதனூடாக NVQ மட்டம் 4 வரையிலான தொழிற்கல்வி சான்றுகளை வழங்குகின்றன.





**கேள்வி: RPL ஊடாக NVQ சான்றிதழ் பெறுவது எப்படி?**

பதில்: RPL என்பது எதாவது ஒரு துறையில் வேலை செய்பவர்கள் மற்றும் 35 வயதிற்கு மேற்பட்டவர்கள் NVQ சான்றிதழைப் பெற எண்ணினால் RPL முறை என்று சொல்லப்படுகின்ற முன் கற்கை நெறி மதிப்பீட்டின் ஊடாக NVQ சான்றைப் பெறமுடியும். தொழிலில் முன்னனுபவம் மற்றும் தொழில் திறன்கள் கொண்டவர்களுக்கு அவர்களின் திறன்கள் மதிப்பீடு செய்யப்பட்டு 6 மாதமோ 1 வருடம் கற்கை நெறியைத் தொடராமல் NVQ 4 மட்ட தொழில் சான்றிதழ் பெற முடியும் பெரும்பாலும் தொழிலுக்காக வெளிநாடு செல்ல எண்ணியிருப்போர் ,தொழில் பதவி உயர்வு பெற எண்ணியிருப்போர் உயர் கல்வி (டிப்ளோமா அல்லது பட்டம்) பெற எண்ணியிருப்போர் இவ் முறை மூலம் அதிக அளவில் NVQ 4 தமையைப் பெற்றுக் கொள்வதை அவதானிக்க முடிகிறது.



**கேள்வி: மூன்றாம் நிலை தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் வழங்கப்படுகின்ற NVQ தொழிற் கல்வி சான்றிதழின் முக்கியத்துவம் என்ன?**

பதில்: NVQ சான்றிதழ் உள்நாட்டில் மட்டும் அல்ல வெளிநாட்டில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொள்ளக் கூடிய அளவு சர்வதேச தரத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகைமை சான்றிதழாகக் காணப்படுகிறது. இலங்கையில் NVQ மட்டம் 7 இணை பூர்த்தி செய்த நபர் ஒருவர் இலங்கை அரச பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்ற நபருடன் ஒப்பிடுகையில் எல்லா வகைகளிலும் வலு மிக்கவராகக் காணப்படுவர்.

காரணம் NVQ முறை மூலம் பட்டம் பெறுவோர் செயன்முறை ரீதியாக அனுபவம் கொண்டவராகக் காணப்படுவார். இலங்கையில் 25 பிரதான தொழில் துறையின் கீழ் 250 மேற்பட்ட தொழில் கற்கை நெறிகள் காணப்படுகின்றன அவற்றில் பெரும்பாலான கற்கை நெறிகள் NVQ மட்டம் 7 வரை பயின்று பட்டம் பெறுவதற்கான வாய்ப்புகள் காணப்படுகின்றன.

**கேள்வி: NVQ என்று சொல்லப்படுகின்ற தொழிற் கல்வி சான்றிதழின் மட்டங்கள் எத்தனை மற்றும் அவற்றினை பயில்வதற்கான கால அளவுகள் என்ன?**

பதில்: NVQ தொழிற் சான்றிதழ் மொத்தம் 7 படிநிலைகளினூடாக வழங்கப்படுகிறது. இதில் மட்டம் 1 தொடக்கம் 4 வரை சான்றிதழ் மட்டம் எனவும் 5 மற்றும் 6 மட்டங்கள் டிப்ளோமா மட்டம் எனவும் இறுதியாக மட்டம் 7 பட்டத்தை பெறுவதற்கான சந்தர்ப்பமாகக் காணப்படுகிறது.

கால அளவுகளைப் பொறுத்த வரைக்கும் கற்கை நெறிக்கு கற்கைநெறி வேறுபடும் இவற்றில் 1 தொடக்கம் 4 வரையான NVQ மட்டங்கள் 6 மாதம் தொடக்கம் ஒரு வருடம் கொண்டதாகவும் NVQ 5 மற்றும் 6 இரண்டு தொடக்கம் மூன்று வருடங்கள் கொண்டதாகவும் காணப்படும் . ஆனால், குறைந்தது 4 வருடத்திற்குள் நீங்கள் விரும்பிய கற்கை நெறியில் பட்டப்படிப்பினை நிறைவு செய்து கொள்ள முடியும்.

**கேள்வி: இறுதியாகப் பாடசாலைக் கல்வியை விட்டு இடை விலகிய மாணவர்களுக்கு மூன்றாம் நிலை தொழில் கல்வியில் இணைவது தொடர்பில் நீங்கள் கூறுவது என்ன?**

பதில்: பாடசாலை கல்வியை விட்டு இடை விலகிய மாணவர்களுக்குச் சொல்ல விரும்புவது என்னவென்றால் உங்களால் உயர் கல்வியைத் தொடர முடியவில்லை என்று கவலைப்பட வேண்டாம் இலங்கையில் 25 பிரதான தொழில் துறையின் கீழ் 350 க்கும் அதிகமான தொழிற்பயிற்சி கற்கை நெறிகள் காணப்படுகின்றன அவற்றுள் உங்களுக்கு பிடித்தமான கற்கை நெறியை உங்களுக்கு அருகில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களுக்குச் சென்று கற்று அந்த துறைகளின் மூலம் டிப்ளோமா மற்றும் பட்டங்களைப்பெற்று எதிர்கால வேலைவாய்ப்புகளுக்கு ஏற்ற வகையில் உங்களை தயார்ப்படுத்தி உங்கள் வாழ்க்கையை வளமானதாக மாற்றிக் கொள்ளுங்கள்.

VTA
ශ්‍රී ලංකා වෘත්තීය පුහුණු අධිකාරිය
இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை
Vocational Training Authority of Sri Lanka

# ஊடக சுதந்திரமும் நவீன சமூகமும்






ஜிந்துஜா விஜயகுமார்,
ஊடககற்கைகள்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

“வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்” வாய்மை என்று கூறப்படுவது யாதெனில், அது மற்றவர்க்கு ஒரு சிறிதும் தீங்கு இல்லாத சொற்களைச் சொல்லுதல் ஆகும். அந்தவகையில், உண்மையில்லாத செய்திகளை ஊடகங்கள் வழங்கினால், அது மக்களுக்கும் சமுதாயத்திற்கும் தீங்காகும்.

தற்கால தொழில்நுட்ப யுகத்தில் ஊடகம் என்பது இன்றியமையாத ஒன்றாக மாறிவிட்டது.

இத்தகைய ஊடகங்களின் ஊடக சுதந்திரமானது நவீன சமூகத்தின் வளர்ச்சி, தகவல் பரிமாற்றத்தின் திறனையும், மக்களின் நலனையும் உயர்த்துவதில் முக்கியப் பங்கை வகிக்கின்றன. ஊடக சுதந்திரம் என்பது ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமான அடிப்படை சுய உரிமையாகும். இது, ஒரு நாட்டின் மக்கள் தங்கள் சுற்றுச் சூழலுக்குத் தொடர்புடைய உண்மையான, சரியான தகவல்களைப் பெறும் உரிமையை உறுதி செய்கிறது.

ஒரு ஜனநாயக அமைப்பின் முக்கிய அம்சமாக, ஊடக சுதந்திரம் காணப்படுகின்றது. ஒரு நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார நடவடிக்கைகளில் பொது மக்களின் விழிப்புணர்வை மேம்படுத்தும் பொறுப்பை ஊடகங்கள் ஏற்றுக்கொள்கிறது.அதன்படி, ஊடகங்கள் ஒரு நாட்டின் மக்களுக்கு அரசியல், சமூக, பொருளாதார விவகாரங்களைஅறிய உதவு கின்ற கருவியாக காணப்படுகின்றன.

ஊடகங்கள் எந்தவித அதிகார வர்க்கத்தின் அழுத்தங்களும் இன்றி சுதந்திரமாகச் செயற்பட்டு மக்களுக்குரிய சரியான நேர்மையான செய்திகளை வழங்குவதையே ஊடக சுதந்திரம் என்று கூறலாம்.

நவீன சமூகங்களில் தகவல் பரிமாற்றத்தினை விரைவாகவும் திறமையாகவும் செயல்பட வேண்டிய கட்டாயத்தில் உள்ளதால், ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவம் மிகவும் முக்கியமானதாகும். சுதந்திரமான ஊடகங்கள் சரியான தகவலை, எந்த தடையுமின்றி, எதையும் மறைக்காமல் மக்களுக்கு வழங்குகின்றன.

ஊடக சுதந்திரம், அரசாங்கத்தின் அல்லது தனிப்பட்ட நலன்களின் கட்டுப்பாட்டிலிருந்து ஊடகங்களைப் பாதுகாக்க உதவுகிறது, இதனால் அரசாங்கங்களின் செயற்பாடுகள், தம்மைச் சுற்றி நடைபெறும் அன்றாட விடங்கள் பற்றிய உண்மையான தகவல்கள் மக்களுக்குக் கிடைக்கிறது.

ஊடக சுதந்திரம் இல்லாத சமுதாயங்களில் தகவல்கள் தணிக்கைக்குட்படுத்தப்படலாம், அவை அதிகாரம் மிக்கவர்களினால் நிர்வகிக்கப்படலாம் இத்தோடு மட்டுமல்லாது ஒரு செய்தியானது தவறான விளக்கத்திற்கு உட்படலாம்.

இதனால் ஜனநாயகத்தின் அடிப்படை உரிமைகள் பாதிக்கப்படலாம். அவ்வாறு நடைபெற அனுமதிக்காமல் ஜனநாயகத்தில் நான்காவது தூணாக ஊடகம் செயற்பட்டு நாட்டின் நலனை மேம்படுத்த வேண்டும்.

தற்கால நவீன சமூகங்கள் அதிக நுண்ணறிவும், திறந்த மனப்பாங்கும் கொண்டவை. அவை மாறுபட்ட கருத்துகளையும், பலவிதமான தகவல் மூலங்களையும் பெற ஆர்வமாக உள்ளன. ஒரு நவீன சமுதாயமானது சுயமாக யோசிக்கவும் உண்மையைத் தேடி அறியவும் விமர்சனப்பூர்வமாகக் கேள்வி கேட்க ஊக்குவிக்கிறது.

இதற்கான அடிப்படையாக ஊடக சுதந்திரம் மிகப் பெரிய பங்காற்றுகிறது. நவீன சமூகங்களில் இணையம், சமூக ஊடகங்கள் மற்றும் பல தகவல் தொழில்நுட்பங்கள் ஊடக சுதந்திரத்தையும், மக்களிடையே தகவல் பரிமாற்றத்தை விரைவாக்குகின்றன.

முறையாகச் செயல்படும் ஊடக சுதந்திரம், நவீன சமூகத்தின் முக்கிய அம்சமாக இருந்து, மக்கள் அதிக தகவல் அறியவும் சுயமாக முடிவெடுக்கவும் உதவுகிறது.

ஊடக சுதந்திரத்தின் முக்கியத்துவம் என்னவென நோக்கினால், ஊடகங்கள் எந்தவொரு நாட்டிலும் செய்திகளைப் பரப்புவதற்கான பொறுப்பை மேற்கொள்வதோடு ஒவ்வொரு சமூகமும் தாம் சார்ந்த சமூக, அரசியல், பொருளாதார சூழ்நிலைகள் குறித்து விழிப்புடன் இருக்க உதவும் கருவியாகவும் செயல்படுகின்றன.

இதன் மூலம், மக்களுக்கு உண்மையான, முழுமையான தகவல்கள் கிடைக்கின்றன. ஊடகங்கள் மீதான நம்பிக்கையும் அதிகரிக்கின்றது. ஒரு நாட்டின் அரசாங்கம் அல்லது தனிநபர்கள் ஊடகங்களைக் கட்டுப்படுத்தும்போது, சரியான தகவல்களை மக்கள் அடைவதில் தடைகள் உருவாகலாம்.

இதனால், அவர்கள் முடிவெடுக்கும் செயல்முறையில் தடங்கல்கள் ஏற்படும். ஊடக சுதந்திரமானது அரசாங்கத்தின் மற்றும் தனியார்களின் கருத்துக்களை மட்டுமே பிரதிபலிக்கும் நிலையைத் தவிர்க்க உதவுகிறது.

ஊடகங்கள் சுதந்திரமாகச் செயல்படும் போது, அரசியல் குற்றச்சாட்டுகள், ஊழல், மனித உரிமை மீறல்கள் போன்ற முக்கிய பிரச்சினைகள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்படுகின்றன. இதன்மூலம், அதிகாரத்தில் இருக்கும் தரப்புக்களை வரம்பினை மீறாமல் கட்டுப்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைக்கிறது.

தொடர்ந்து, நவீன சமுதாயங்களில் ஊடக சுதந்திரத்தின் பங்கினை நோக்கினால் நவீன சமுதாயங்கள் வேகமாக மாறிக்கொண்டிருக்கின்றன. உலகம் முழுவதும் தொழில்நுட்ப வளர்ச்சி, சமூக ஊடகங்கள், இணையவழி தகவல் பரிமாற்றம் ஆகியவை ஊடகங்களின் சக்தியை அதிகரித்துள்ளன. இதனால், மக்கள் விரைவாகவும் பரந்த அளவிலும் தகவல்களைப் பெற முடிகிறது.

ஆனால், தகவல்களின் நம்பகத்தன்மை மற்றும் உண்மைத்தன்மை பற்றிய கேள்விகளும் எழுகின்றன. இதனால் ஊடக சுதந்திரத்தில் பொறுப்புணர்வான செயல்பாடுகள் முக்கியமாகின்றன.

ஒரு ஊடகமும் எந்தவித கட்டுப்பாடும் இன்றி செயல்படுமாயின் அங்கும் தவறான செய்திகளே அதிகம் பரப்பப்படுவதோடு ஊடகங்கள் தன்னிச்சையாகச் செயல்படும் தன்மை காணப்படுகின்றது. இதனால் ஊடக சுதந்திரம் பொறுப்புணர்வு மிக்க ஊடக சுதந்திரமாகக் காணப்பட வேண்டும்.

ஊடகத்தின் மூலம் ஒரு செய்தியானது வெளியிடப்படுகின்றது எனின் மக்கள் அதனை நம்புகின்ற தன்மை அதிகமாகக் காணப்படுகின்றது. இதனால் ஊடக சுதந்திரமானது பொறுப்பு மிக்க ஊடக சுதந்திரமாக ஊடகங்களால் கையாளப்பட வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும்.

நவீன சமூகங்கள் வெளிப்படையான மற்றும் சகிப்புத்தன்மையுள்ள சமூகங்களாக மாறுவதற்கு ஊடக சுதந்திரம் ஒரு முக்கிய ஊக்கமாகச் செயல்படுகிறது. மக்கள் அரசாங்கத்தின் நடவடிக்கைகள், சமூக பிரச்சனைகள் மற்றும் சர்வதேச நிகழ்வுகள் பற்றி விழிப்புடன் இருக்க வேண்டும். இதனை ஊடகங்களின் செய்திகளின் மூலம் அடைகின்றனர்.

செய்தியாளர்கள் தங்கள் சுயநிலை மறந்து அரசியலமைப்பை மறந்தால் அல்லது ஊடகங்களைக் கட்டுப்படுத்துவோர் தகவல்களை மறைக்க முயற்சித்தால் நவீன சமூகத்தின் முன்னேற்றம் பாதிக்கப்படும்.

ஊடக சுதந்திரம் இல்லாத சூழலில், மக்கள் முழுமையான மற்றும் சுயாதீன தகவல்களை அடைய முடியாது. இதனால், சுயநிர்ணயத்தின் அடிப்படை உரிமை கேள்விக்குறியாக்கப்படும்.

இது முறையான ஜனநாயக செயல்பாட்டை மட்டுமின்றி, சமூகத்தின் வளர்ச்சியையும் பாதிக்கும்.

இவ்வாறான காரணங்களினால் நவீன சமுதாயத்தில், ஊடக சுதந்திரம் மிக முக்கியமான ஒன்றாகக் காணப்படுகின்றது. மக்கள் உண்மையான, நம்பகமான தகவல்களை அடையும் உரிமையைப் பாதுகாக்க வேண்டும். ஊடகங்கள் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்,

ஆனால், சமுதாயத்தின் நலனுக்காக ஊடகங்கள் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும்.

நவீன சமூகங்களில் இந்த நிலைப்பாடு தக்கவைத்தால் நம் ஜனநாயக நடைமுறை சீராகவும்,மக்களின் நலன் சிறப்பாகவும் இருப்பதோடு ஊடகங்கள் மீதான மக்களின் நம்பகத்தன்மை அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை.



# மட்டக்களப்பு கொம்பு முறி

ஜனுக் ஷி ஸ்ரீகாந்தன்,
இரண்டாம் வருடம்,
ஊடக கற்கைத்துறை,
யாழ்.பல்கழைக்கழகம்.





நவீன உலகின் பல்வேறு பரிமாணங்களுக்கு உட்பட்டுச் செல்லுகின்ற இன்றைய காலத்திலே ஆங்காங்கே ஒரு சில இடங்களில் பாரம்பரிய சடங்குகளினை தலைமுறை தலைமுறையாக பேணி பாதுகாத்து வருகின்ற தன்மை காணப்படுகிறது.

பாரம்பரிய சடங்குகளினை இன்றும் பேணிப் பாதுகாத்து தொடர்ந்து நிகழ்திக் கொண்டு வருகின்ற பெருமை மட்டக்களப்பினையே சாரும்.

அங்குள்ள புராதன வரலாற்று பண்பாட்டுக்கிராமமாகவும் கண்ணகி அம்மன் வரலாற்றைக் கூறும் ஊர் சுற்றும் காவியத்தில் எட்டுத்திக்கு புகழ், கற்றவர்கள் வாழும் வந்தாறுமூலை எனவும் போற்றும் இவ் இடத்தில் கொம்பு முறி விளையாட்டினை மழை வேண்டி நாடாத்தப்படுகின்ற போக்கு காணப்படுகிறது. இவை அச் சமூகத்தின் அடையாளத்தினை வெளிப்படுத்துவனவாகவும் காணப்படுகின்றன.

இந்தக் கொம்பு முறி சடங்கு வருடம் தோறும் இடம் பெறுவதில்லை. குறிப்பாக மழையற்று காணப்படும் சந்தர்ப்பங்களில் விவசாயிகள் மழை வேண்டி இவ் விளையாட்டினை நிகழ்த்துவர் .ஒரு சில வருடங்களுக்கு பின்னர் இம்முறை இவ் விளையாட்டானது நிகழ்த்தப்பட்டது.

கொம்பு முறி விளையாட்டுக்கென கதையொன்று உள்ளது.

அதாவது ராமநாட்டின் சிற்றூரான கிடாக்குழியில் இருந்து கதிர்காமத்திற்கு யாத்திரியாக வந்த சித்தர் ஒருவர் இலங்கைத் தீவின் கிழக்கே உள்ள முந்தன்குமாரவெளி வேரோடியலைக்கு வடக்கே உள்ள பாதை வழியாக உள்ள வனாந்தரமாகவும், பூஞ்சோலையாகவும், பருவங்களுக்கு கனி தரும் மரச் சோலைகளாலும் கொடிகளாலும் சூழப்பட்டு வெயிலோ, பறவைகளோ உள்ளே நுழையா வண்ணம் குளிர்ச்சியும், பூக்களின் நறுமணம் வீசும் சோலை நடுவினில் பசுக்களும், காளைகளும்,வானரங்களும், பறவைகளும், கடல்வழி, தூர தேசத்து வணிகர்களும் யாத்திரியர்களும், வெளியூர், உள்ளூர் வாசிகளும், ஆயர் சிறுவர்களும், விவசாயிகள் என அனைவரும் ஓய்வெடுத்துச் செல்லும் சோலையிலே நிர்முகநாகலிங்கேஸ்வரை வணங்கி விட்டு அங்குள்ள சோலையில் இளைப்பாறிக் கொண்டிருந்த போது, அங்கு ஆடு, மாடுகள் மேய்த்துக் கொண்டிருந்த ஆயச் சிறுவர்கள், “நீண்ட தலை முடியுடன் இருக்கும் நீங்கள் யார்” என வினாவிய போது, சித்தர் தன்னைப் பற்றி சிறுவர்களிடம் கூறினார். சிறுவர்கள் சித்தரை அவரின் ஊரின் பெயரைக் கொண்டு கிடாக்குழியார் என்றே அழைத்தார்கள்.

சித்தர் ஓய்வெடுக்கும் தருணங்களில் ஆயச் சிறுவர்களுக்குக் கொம்பு விளையாட்டினை பயிற்றுவித்தார். ஆயச் சிறுவர்கள் கொம்பு விளையாட்டை மிக ஆர்வத்துடன் விளையாடி மகிழ்ந்தார்கள். அவர்கள் கொம்பு விளையாட்டைப் பற்றி சித்தரிடம் விளக்கம் கேட்கையிலே கண்ணகி வழிபாடு பற்றி எடுத்துக் கூறினார்.

கண்ணகை அம்மனை வேண்டி வழிபட்டால் வறட்சி காலங்களில் ஏற்படும் அம்மை, கொப்பளிப்பான், கண் நோய், போன்ற ‘அம்மன் கோதாரி’ நோய்கள் பரவாமலும் அம்மனுக்கு விழா நடத்தினால் அவள் மகிழ்ச்சியுற்றால் மழை பொழியுமெனவும், கோதாரிகள் குறையும் எனவும் கூறினார்.

ஆயச்சிறுவர்கள் சித்தர் கூறிய செய்திகளை தங்களது தாய், தந்தையாரிடம் தெரிவித்து ஊரில் உள்ள அனைவரும் சித்தரைச் சந்திக்கச் சென்றனர். தன்னை நாடி வந்த மக்களிடம் சித்தர் “இவ்விடத்தில் கண்ணகி உறைவாள், ஓர் கன்னிப் பெண்ணினால் கண்ணகி சிலை கொண்டு வரப்பட்டு கண்ணகிக்குரிய சடங்குகள் செய்ய வேண்டும்” என கூறினார்.

ஊரில் உள்ள வனப்பகுதியில் கண்ணகி அம்மனை வேண்டி காளையர்கள் கண்ணகி கட்சி, கோவலன் கட்சி என்று இரண்டு பிரிவாகப் பிரிந்து கொண்டு, வளைந்த தடிகள் இரண்டினை ஒன்றோடு ஒன்று கொழுவி இழுத்து முறித்து விளையாடி கண்ணகை கட்சிக்கு வெற்றி கொடுத்து ஆடிப் பாடி மகிழ்ந்திருந்த காட்சியை அங்கிருந்த வேம்பு மரநிழலில் பெண் மூதாட்டி ஒருத்தி பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்தின் பின் அந்த பெண் மூதாட்டி மாயமாக மறைந்தாள். கொம்பு விளையாட்டைப் பார்ப்பதற்கு கண்ணகை அம்மன் மானிட வடிவில் வந்து காட்சி கொடுத்ததை எண்ணி ஊர் மக்கள் குரவை ஒலி எழுப்பி கண்ணகை அம்மனை வழிபட்டார்கள். எனவும் கூறுகின்றன. இவற்றினால் இவ்விளையாட்டினை தொடர்ந்து நடாத்தி வருகின்றார்கள்.

இந்த கொம்பு முறி விளையாட்டு பற்றி இந்த கிராம வாசியான கணபதிப்பிள்ளை அவர்களிடம் நிகழ்த்தப்படும் முறைமை பற்றி வினாவிய போது, முதலில் வடசேரி, தென்சேரி என இரண்டு அணிகளாகப் பிரிந்து ஆலய முன்றலில் தேங்காய் உடைத்து அதனைத் தொடர்ந்து, இரு அணிகளும் காட்டுக்குச் சென்று கொம்பு செய்வதற்குத் தேவையான மரத்தினை வெட்டிக்கொண்டு வந்து இச் சடங்கினை நிகழ்த்துவார்கள்.

அங்கு உள்ள மரங்களில் தங்களுக்குரிய கொம்புகளைத் தேர்வு செய்து அதனைத் தொடர்ந்து, கொம்பினை இரு தலைவர்களாகப் பிரிந்து தங்களது கொம்புகளை இருவரது வீட்டில் வைத்து கிணற்றுக்குள் குறிப்பிட்ட சில நாட்களுக்கு வைப்பார்கள் அதனைத் தொடர்ந்து, இரு அணிகளும் தங்களது கொம்பினை ஏடகம் பூட்டி ஊரை வளைப்பார்கள் அந்த சமயத்தில் ஒரு அணி ஒரு திசையிலும் மற்றைய அணி எதிர்த் திசையிலும் செல்லும் அச்சமயத்தில் இரு அணிகளும் ஒவ்வொரு அணிக்கு எதிராகப் பாடல்களைப் பாடி ஊரைச் சுற்றி வளைத்து வருவார்கள் அதனைத் தொடர்ந்து, ஆலய முன்றலில் கொம்பு முறி நிகழ்வு இடம்பெறும் தாய் மரமாகக் கண்ணகி அம்மன் ஆலயம் முன்றலில் காணப்படும் மரத்தில் தென்சேரி, வடசேரி அணியானது தங்களுக்குத் தேவையான மரத்தினை வெட்டுவதற்காக மாடு அற்ற வண்டிலில் தாமே மாடாகக் கொண்டு “செவ்வாய் குத்தி” என்று அழைக்கப்படும் பனை மரத்தை வெட்டி வருவார்கள்.

பின்னர் ஆலய முன்றலில் இரு அணிகளாகப் பிரிந்து இக்கொம்பு விளையாட்டு நடைபெறும். அதனைத் தொடர்ந்து வெற்றி பெற்ற அணியினர் தங்களது வெற்றியினை மிகவும் ஆரவாரமாகக் கொண்டாடுவார்கள்.

வெற்றி பெற்ற அணியினர் அதனைக் கொண்டாடும் வகையில் பொங்கல் பொங்கி மகிழ்வார்கள் அதே போன்று நம்பிக்கை பற்றி வினாவிய போது,

இந்த விளையாட்டினை நிறைவேற்றியதன் பின்னர் மழை வந்து பயிர்கள் நன்கு செழிப்பாக வளர்வதுடன் விளைச்சல் மேலோங்கும்.

கிராமமே செழிப்படையும். நோய்கள் நீங்கும். எனவும் கூறினார்.

பெரும்பாலான ஊர் மக்கள் அனைவரும் இணைந்து தமது பக்தியையும் நம்பிக்கையினையும் வெளிப்படுத்துகின்ற போக்கு இங்கு காணப்படுகிறது

கொம்பு முறி விளையாட்டு பாரம்பரியத்திற்காகவும் வேண்டுதலுக்காக மாத்திரமே நிகழ்த்தப்படாது மக்களின் ஒற்றுமையையும், பொது மக்களின் தன்னம்பிக்கையையும் வெளிப்படுத்துகின்ற இடமாகவும் மற்றும் பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியளிப்பனவாகவும் திகழ்கிறது.

இந்த விளையாட்டின் மூலமாகப் பக்தர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களைக் கடவுளிடம் நேரடியாகக் கொண்டு சேர்க்க முடியும் எனவும் நம்பினர். அதனால் இச் சடங்கினை தொடர்ந்தும் நம்பிக்கையுடனும் விசுவாசத்துடனும் நிகழ்த்தி வருகின்றனர்.

## மலையகப் பகுதிகளில்
# போஷாக்கின்மை குறைபாட்டை நிவர்த்தி செய்வோம்

சுப்ரமணியம் காயத்திரி.
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்





தரமான உணவு, சுகாதாரம் மற்றும் ஊட்டச்சத்துக் குறித்த விழிப்புணர்வு குறைவாகவுள்ள மலையகப் பகுதிகளில் போஷாக்கின்மை மிகவும் அழுத்தமான சுகாதார சவால்களில் ஒன்றாக உள்ளது. மலையகத்தின் பல்வேறு பகுதிகளில் போஷாக்கின்மையானது தனிநபர்களின் ஆரோக்கியத்தினைப் பாதிப்புக்குள்ளாக்குவதோடு மட்டுமல்லாமல், மலையகத்தின் பொருளாதார வளர்ச்சி மற்றும் சமூக முன்னேற்றத்திற்கும் தடையாக அமைகின்றது.

இந்தக் கட்டுரை மலையகத்தில் போஷாக்கின்மைக்கான காரணங்கள், அதனால் ஏற்படும் விளைவுகள், போஷாக்கின்மையைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகளின் அவசியத்தை வலியுறுத்துகின்றது.

ஒரு நபருடைய உடலின் சரியான செயற்பாட்டிற்கு போது, மானளவு ஊட்டச்சத்துக்கள் இல்லாதபோது போஷணைக் குறைபாடு ஏற்படுகிறது. போஷணைக் குறைபாடானது, வளர்ச்சிக் குன்றல் மற்றும் நிறை குறைவு போன்றவற்றுடன் தொடர்புடைய நோய்களுக்கு வழிவகுக்கின்றது. மலையக மக்கள் மத்தியில் போஷாக்கின்மையானது, அதிகரித்து வருவதாக, அண்மையில் மத்திய மாகாண சுகாதார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தகவலுக்கமைய உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மத்திய மாகாணத்தில் இரண்டாயிரத்து நூற்று நாற்பத்திரண்டு (2142) சிறுவர்கள் கடுமையான போஷாக்கின்மையினாலும், பதினைந்தாயிரத்து தொள்ளாயிரத்து இருபது (15,920) குழந்தைகள் மிதமான போஷாக்கின்மையினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கண்டி, மாத்தளை, நுவரெலியா ஆகிய மாவட்டங்களிலேயே ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள சிறுவர்கள் கண்டறியப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருபத்தெட்டு சதவீதமான மக்கள் (28%) உணவுப் பாதுகாப்பின்மையினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.குறிப்பாக,பெருந்தோட்டப்பகுதிகளில் ஐம்பத்தொரு (51%) சதவீதமான மக்கள் உணவுப் பாதுகாப்பின்றி காணப்படுவதாக, உலக உணவுத் திட்டம் மற்றும் விவசாய அமைப்பின் கூட்டு ஆய்வு அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. மலையகத்தில் ஊட்டச்சத்துக் குறைபாடு அதிகரித்துக் காணப்படுவதில் சில காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன.

**வறுமை:** பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகின்ற வருமானம், அவர்களுடைய அன்றாட வாழ்க்கையினை மேற்கொள்வதற்குப் போதுமானதாக இல்லை.

தமக்கு கிடைக்கின்ற ஊதியத்தினை அடிப்படையாகக் கொண்டே பிள்ளைகளின் கல்வி, ,உணவு உள்ளடங்கலாக அடிப்படை மற்றும் அத்தியாவசியத் தேவைகளை பூர்த்திச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் நிலவுகின்றமையினால், உணவிற்காக ஒதுக்கப்படும் பணத்தின் அளவு மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுகின்றது. இதனால் போஷணை மிகுந்த உணவுப்பொருட்களைக் கொள்வனவு செய்வதில் மலையக மக்கள் இன்னல்களைச் சந்தித்து வருகின்றனர்.

**பொருட்களின் விலை உயர்வு :** இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளைத் தொடர்ந்து அதிகரித்துள்ள பொருட்களின் விலை உயர்வுக் காரணமாக, உணவுப்பொருட்களினைக் கொள்வனவு கேள்வி குறியாக்கப்பட்டுள்ள நிலையில் மலையக மக்கள் மத்தியில் போஷாக்கின்மையின் மட்டம் அதிகரித்துச் செல்கின்றது.

**சுகாதார பராமரிப்புக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் மற்றும் விழிப்புணர்வின்மை:** மலையகத்தின் பல பகுதிகளில் சுகாதார வசதிகள் குறைவாகவே உள்ளன. சுகாதார வசதிகள், மகப்பேறு பராமரிப்பு மற்றும் குழந்தை ஊட்டச்சத்து கல்விக்கான அணுகல் இன்மை போன்றன ஊட்டச்சத்துக் குறைபாடு பிரச்சினையை அதிகரிக்கச் செய்கின்றன. அத்துடன், பசி ஏற்படுகின்ற பொழுது உண்பதற்கு ஏதேனும் உணவிருந்தால் போதும் என்ற உணர்வே பெருந்தோட்ட மக்கள் மத்தியில் காணப்படுகின்றதே, தவிரப் போஷாக்கான உணவுகளை உட்கொள்வதன் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வு இல்லை.

**காலநிலை :** அதிகரித்த மழைவீழ்ச்சி நிலவுகின்ற காலப்பகுதிகளில் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படக்கூடும். சீரற்ற காலப்பகுதிகளில் வருமானம் முழுதாக இழக்கப்படுகின்றது.

பயிர்ச்செய்கையின் வீழ்ச்சி, வறட்சி மற்றும் வெள்ளம் ஏற்படின் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்குப் பற்றாக்குறை ஏற்படும். இதனாலும், போஷாக்கின்மை பிரச்சினை அதிகரித்துச் செல்லுகின்ற நிலை காணப்படுகின்றது.

**கடின உழைப்பு :** ஓய்வின்றிய தொடர்ச்சியான கடின உழைப்பும், போஷாக்கின்மை தொடர்வதற்கான முக்கிய காரணியாகும். தேயிலைத் தோட்டத்தில் பணிபுரிபவர்களின் மத்தியில் காலை முதல் மாலை வரை களைப்பின்றித் தாம் உழைப்பதற்குப் தேவையானளவு சக்தியினை கோதுமை மாவினால் தயாரிக்கப்படும் உணவுப் பொருட்களே வழங்குகின்றன எனும் எண்ணப்பாடு காணப்படுகின்றது. இதனால் காலை நேரத்தில் பெரிதும் கோதுமை மாவினால் தயாரிக்கின்ற ரொட்டியினையே பிரதான உணவாக உட்கொள்கின்றனர். அத்துடன் ஓய்வின்றிய கடுமையான உழைப்பின் காரணமாகவும், தமது குடும்பச்சூழல் மற்றும் வறுமை என்பவற்றினாலும் தம்மிடம் காணப்படுபவற்றைக் கொண்டு ஒரு நாளின் மூன்று உணவுவேளைகளையும் சமாளிக்கும் வகையில், தமது உணவின் அளவினை வரையறைக்குள் கொண்டு வாழ்ந்து வருகின்றனர்.

**அதிகரித்த மது மற்றும் புகையிலையின் பாவனை:** மலையகத்தில் பெரிதும் மதுபானசாலைகளற்ற நகரங்களைக் காண்பது அரிதாகும்.

ஒரு சில குடும்பங்களில் தமக்குக் கிடைக்கப்பெறுகின்ற வருமானத்தில் பெருமளவில் மது அருந்துவதற்குச் செலவழிப்பதனால் தமக்கு போதுமானளவு உணவுப்பொருட்களைக் கொள்வனவுச் செய்வதற்கான பணமின்றிய நிலையும் ஏற்படுகின்றது. அத்துடன், வெற்றிலை பாக்கு என்பவற்றுடன் அதிகளவில் புகையிலையினையும் பயன்படுத்துகின்றனர். இதனால் வாய்ப்புற்று நோய் உட்பட பல நோய்களும் ஏற்படுவதுடன், தனது மற்றும் தமது குழந்தைகளின் போஷாக்கு மட்டம் குறித்துக் கவனம் செலுத்துவது குறைவாகும்.

**சிறுவர்களுக்கு முறையான பராமரிப்பின்றி நிலை:** தற்காலத்தில் பெற்றோர்கள் அவர்களது குழந்தைகளினை தமது குடும்பத்திலுள்ள முதியவர்களின் பராமரிப்பில் ஒப்படைத்து விட்டு கொழும்பு மற்றும் அதனை அண்மித்த பகுதிகளுக்குத் தொழிலுக்காகச் செல்கின்றனர்.

இவ்வாறான சிறுவர்களுக்கு முறையான பராமரிப்பின்றிய நிலை ஏற்பட்டுள்ளதுடன், போஷணை மட்டம் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றது. இவ்வாறு மலையகத்தில் போஷாக்கு மட்டம் கேள்விக்குறியான நிலையில் காணப்படுகின்றது.

போஷாக்கு நிறைந்த உணவினை உட்கொள்வதன் மூலம் எமது நாளாந்த கடமைகளைச் செய்வதற்குத் தேவையான சக்தியினைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன், எமது உடல் மற்றும் உள வளர்ச்சிக்குத் துணை புரிகின்றது. அத்துடன், நோயெதிர்ப்பச் சக்தியினையும் வழங்குகின்றது. அந்தவகையில், போஷாக்கின்மையினால் சிறுவர்கள், கர்ப்பிணித் தாய்மார்கள் உட்பட முதியவர்கள் எனஅனைத்துத் தரப்பினர்களும் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே, போஷாக்கின்மையினை மட்டுப்படுத்துவதற்கு சில விடயங்களை அன்றாட வாழ்க்கையில் பழக்கப்படுத்திக் கொள்ளலாம். அவ்வாறான சில விடயங்கள், ஒரே வகையான உணவுகளைத் தொடர்ந்து உட்கொள்ளாது, அடிக்கடி பல வகையான உணவுகளை உட்கொள்வதற்கு பழக்கப்படுத்திக் கொள்ளலாம்.

ஒவ்வொரு வயது மட்டத்திற்கும் பொருத்தமான வகையில், போதுமானளவு உணவுகளை உட்கொள்ளல் வேண்டும்.

நாம் உட்கொள்கின்ற உணவுகளில் சகல விதமான போஷணைக்கூறுகளும் அடங்கிய உணவுப் பொருட்களை ஒரு வேளையேனும் உட்கொள்ளுதல் சிறந்ததாகும்.

சுத்தமான முறையில் வீடுகளில் தயாரிக்கப்பட்ட சுகாதாரமான உணவினை உட்கொள்ள பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். சமூக நலத்திட்டங்கள் மற்றும் பாடசாலை பாடத்திட்டங்களில் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். கர்ப்பிணிப் பெண்கள் மற்றும் சிறு குழந்தைகளுக்கான ஊட்டச்சத்து திட்டங்கள் தோட்டப்பகுதிகளில் பரவலாகக் கிடைப்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். அரசாங்கங்கள் தங்கள் கொள்கை கட்டமைப்பில், குறிப்பாக மலையகத்திற்கான போஷாக்கு மட்டத்திற்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். மலையகம் பகுதிகளுக்கான சுகாதாரம், உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி ஆகியவற்றுக்கு அதிக வளங்களை ஒதுக்கலாம்.

மலையகப் பகுதிகளில் ஊட்டச்சத்துக் குறைபாடு என்பது அரசாங்கங்கள், சமூகங்கள் கவனம் செலுத்த வேண்டிய ஒரு தீவிரமான பிரச்சினையாகும்.

வறுமை, உணவுப் பாதுகாப்பின்மை மற்றும் சுகாதாரப் பாதுகாப்புக்கான மட்டுப்படுத்தப்பட்ட அணுகல் போன்ற அடிப்படைக் காரணங்களை நிவர்த்தி செய்வதன் மூலம், போஷாக்கின்மை குறைபாட்டின் பரவலைக் குறைத்து, மலையக மக்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வை மேம்படுத்த முடியும். ஒருங்கிணைந்த முயற்சிகள் மற்றும் நிலையான தீர்வுகள் மூலம், வருங்கால சந்ததியினர் செழித்து தங்கள் முழு திறனை அடைவதற்கான வாய்ப்போடு வளருவதை நாம் உறுதிசெய்ய முடியும்.

சவூதி அரேபியா

சவூதியில் 101 வெளிநாட்டவருக்கு

# மரண தண்டனை



சவூதி அரேபியாவில், இந்த ஆண்டில் மாத்திரம், 101 வெளிநாட்டினருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டு உள்ளது.

இந்த தகவல் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், சர்வதேச நாடுகளைக் கவலையடையவும் செய்துள்ளது.

சவூதி அரேபியாவுக்கு, போதைப்பொருள் கடத்தியதாகக் குற்றம் சாட்டப்பட்ட ஏமன் நாட்டவர் ஒருவருக்கு, நஜ்ரானின் தென்மேற்குப் பகுதியில், சனிக்கிழமையன்று (16), மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

இதையடுத்து வெளியான தகவலின்படி, 2024இல் இதுவரை 101 வெளிநாட்டவர்களுக்கு, சவூதியில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

2023 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளை ஒப்பிடுகையில், இது மூன்று மடங்கு அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது. மேலும், ஆண்டுக்கு சராசரியாக 34 வெளிநாட்டவர்கள், சவூதி அரேபியாவில் மரண தண்டனையை எதிர்கொள்வதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

2023இல், சீனா மற்றும் ஈரானுக்கு அடுத்தபடியாக அதிக எண்ணிக்கையிலான மரண தண்டனையை நிறைவேற்றிய நாடாக சவூதி அரேபியா அறியப்படுகிறது. மேலும், 2024இல், இதுவரை வெளிநாட்டவர்கள், உள்நாட்டவர்கள் என, மொத்தமாக 274 பேருக்கு மரண தண்டனையை, சவூதி அரேபியா நிறைவேற்றியுள்ளது.

இந்த ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட வெளிநாட்டவர்களில் பாகிஸ்தானைச் சேர்ந்த 21 பேர், ஏமனில் இருந்து 20 பேர், சிரியாவில் இருந்து 14 பேர், நைஜீரியாவில் இருந்து 10 பேர், எகிப்தில் இருந்து 9 பேர், ஜோர்டானில் இருந்து 8 பேர் மற்றும் எத்தியோப்பியாவைச் சேர்ந்த 7 பேர் அடங்குவர்.

அத்துடன், சூடான், இந்தியா மற்றும் ஆப்கானிஸ்தானில் இருந்து தலா மூன்று பேரும், இலங்கை, எரித்திரியா மற்றும் பிலிப்பைன்ஸில் இருந்து தலா ஒருவரும் அடங்குவர்.

குறிப்பாக, போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்கான மரணதண்டனைகளே இந்த ஆண்டு எண்ணிக்கையை அதிகரித்துள்ளன.

ஒரு வருடத்தில் வெளிநாட்டினருக்கு அதிகப்படியான மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது இதுவே முதல் தடவை என்றும் சவூதி அரேபியா ஒரு வருடத்தில் 101 வெளிநாட்டினருக்கு மரண தண்டனை நிறைவேற்றியதில்லை என்றும் கூறப்படுகிறது.

பெரும்பாலும், கொலை வழக்கு, போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட குற்றங்களுக்கே, சவூதியில் மரண தண்டனை விதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.



சூடான்

## மோதலில் 150 படையினர் பலி

சூடான் நாட்டின் தலைநகர் தெற்கு டார்ப் மாகாணம், அல் பஷீர் நகரில், திங்கட்கிழமை(18), இராணுவத்திற்கும் துணை இராணுவத்தின் அதிவிரைவுப்படையினருக்கும் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டை மோதலில், துணை இராணுவத்தின் அதிவிரைவுப்படையினர் 150 பேர் உயிரிழந்தனர்.

கடந்த 2021ஆம் ஆண்டு, சூடான் நாட்டின் ஆட்சியை, இராணுவம் கைப்பற்றியது. இந்த ஆட்சியின் தலைவராக இராணுவ தளபதியான ஜெனரல் ஃபடக் அல்-பர்ஹன் செயற்பட்டு வருகிறார்.

அவருக்கு அடுத்த நிலையில் ஆட்சியின் துணைத்தலைவராகத் துணை இராணுவப்படையின் தளபதியான ஜெனரல் முகமது ஹம்டன் டகலோ செயற்பட்டு வருகிறார்.

இதனிடையே, துணை இராணுவத்தின் படைப்பிரிவுகளில் ஒன்றான அதிவிரைவு ஆதரவு படையினரை இராணுவத்துடன் இணைக்க இராணுவ தளபதியான ஜெனரல் ஃபடக் அல்-பர்ஹன் முயற்சி மேற்கொண்டார். இதற்குத் துணை இராணுவப்படையின் அதிவிரைவு ஆதரவு படையினர் தரப்பில் எதிர்ப்பு கிளம்பியது.

இதனால், இராணுவத்திற்கும், துணை இராணுவத்திற்கும் இடையே கடந்த ஆண்டு ஏப்ரல் 15ஆம் திகதி முதல் கடும் மோதல் தொடர்ந்த வண்ணமுள்ளது.

சூடானில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் போரில் இதுவரை 24 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரேஸிலில்

“உலக போர்களால்

## தெற்கு நாடுகளுக்கு ஆபத்து”

உலகில் நடைபெற்றுவரும் போர்களால், தெற்கு நாடுகளில் உணவு, எரிபொருள், உரம் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உருவாகியுள்ளதாக, இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஜி20 உச்சி மாநாட்டில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தெற்கு நாடுகளுக்கு முக்கியத்துவம் அந்நாடுகள் சந்திக்கும் சவால்களை மனதில் வைத்துச் செயற்பட்டால் மட்டுமே நமது ஆலோசனைகள் வெற்றிபெறும் என்றும், மோடி எடுத்துரைத்தார்.

ஜி20 உச்சி மாநாடு, பிரேசில் நாட்டின் டியோடி ஜெனிரோ நகரில், திங்கட்கிழமை (18) ஆரம்பமானது.

இந்த உச்சி மாநாட்டில் இந்தியா, அமெரிக்கா, பிரேசில், பிரான்ஸ், சீனா, ஜெர்மனி, அவுஸ்திரேலியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தலைவர்கள் பங்கேற்றுள்ளனர்.

இம்முறை “சமூக உள்ளடக்கம் மற்றும் பட்டினி, வறுமைக்கு எதிரான போராட்டம்” என்ற தலைப்பில் நடப்பு ஜி20 உச்சி மாநாடு நடைபெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.




குஜராத்

## குஜராத்தில் நிலநடுக்கம்

குஜராத் மாநிலத்தில், திங்கட்கிழமை(18) இரவு 8.18 மணியளவில், நிலநடுக்கம் ஏற்பட்டது.



அம்மாநிலத்தின் கூட்ச் மாவட்டம், ரபர் நகரில் இருந்து தென்மேற்கே 26 கிலோ மீற்றர் தொலைவை மையமாகக் கொண்டு, இந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கம் 4 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. இந்த நிலநடுக்கத்தால் யாருக்கும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை.

முன்னதாக கடந்த 2001 ஜனவரி 26ஆம் திகதி 6.9 ரிச்டர் அளவில் பதிவான நிலநடுக்கத்தில், 13,800 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

மணிப்பூர்

மணிப்பூரில் தொடரும் பதற்றம்:

## மத்திய அரசின் அதிரடி தீர்மானம்



மணிப்பூரில் மீண்டும் வன்முறை வெடித்துள்ள நிலையில், தொடர்ந்து அங்குப் பதற்றமான சூழல் நீடிப்பதால், சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மேலதிக படைகளை அனுப்புவதற்கு மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

மணிப்பூரில் வன்முறைச் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளதால், பாதுகாப்பு நிலவரம் குறித்து ஆராய, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா தலைமையில் டெல்லியில், திங்கட்கிழமை (18) அவசர ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இதன்போது, வன்முறையால் பாதிக்கப்பட்டுள்ள மணிப்பூருக்குக் மேலதிக படையினரை அனுப்பவும், அங்கு விரைவில் முழு அமைதியை ஏற்படுத்தக் கவனம் செலுத்து மாறும் அமித் ஷா அறிவுறுத்தினார்.

இதற்கமைய, மணிப்பூர் மக்களை வன்முறையில் இருந்து பாதுகாத்து, அமைதியை நிலை நாட்டும் வகையில் மேலதிகமாக 5,000 வீரர்கள் அடங்கிய துணைஇராணுவப்படையை அனுப்புவதற்கு, மத்திய உள்துறை அமைச்சகம் முடிவு செய்துள்ளது.




தென்னாபிரிக்காவுக்கெதிரான தொடருக்கான

## இலங்கைக் குழாமில் லசித் எம்புல்தெனிய

தென்னாபிரி க்காவுக்கெதிரான தொடருக்கான இலங்கைக் குழாமில் லசித் எம்புல்தெனிய இரண்டாண்டுகளுக்கு பின்னர் இடம்பிடித்துள்ளார்.

குழாமில் ரமேஷ் மெண்டிஸ் இடம்பெறவில்லை.

குழாம்: பதும் நிஸங்க, திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், கமிந்து மெண்டிஸ், ஓஷாத பெர்ணாண்டோ, சதீர சமரவிக்கிரம, குசல் மெண்டிஸ், தனஞ்சய டி சில்வா (அணித்தலைவர்), நிஷான் பீரிஸ், பிரபாத் ஜெயசூரிய, லசித் எம்புல்தெனிய, மிலான் ரத்னாயக்க, அசித பெர்ணாண்டோ, விஷ்வ பெர்ணாண்டோ, லஹிரு குமார, கசுன் ராஜித.




## இலங்கைக்கெதிரான தொடருக்கான குழாமில் பவுமா

இலங்கைக்கெதிரான டெஸ்ட் தொடருக்கான தென்னாபிரிக்கக் குழாமில் முழங்கை காயத்திலிருந்து குணமடைந்த தெம்பா பவுமா இடம்பெற்றுள்ளார்.

இதேவேளை, ஓய்வுக்குப் பின்னர் டெஸ்ட் குழாமுக்கு ஜெரால் கொயட்ஸி, மார்கோ ஜன்சன் ஆகியோரும் திரும்பியுள்ளனர்.

குழாம்: தெம்பா பவுமா (அணித்தலைவர்), டேவிட் பெடிங்ஹாம், ஜெரால்ட் கொயட்ஸி, டொனி டி ஸொர்ஸி, மார்கோ ஜன்சன், கேஷவ் மஹராஜ், ஏய்டன் மார்க்ரம், வியான் முல்டர், செனுரன் முத்துசாமி, டேன் பற்றர்சன், ககிஸோ றபாடா, ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், றயான் றிகெல்டன், கைல் வெரைன்.

## இன்டர் மிலன் செல்லும் சியெஸ்கா?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லிவர்பூலின் முன்களவீரரான பெடெரிக்கோ சியெஸ்காவை அடுத்தாண்டு ஜனவரியில் கைச்சாத்திடுவது குறித்து இத்தாலிய சீரி ஏ கழகமான இன்டர் மிலன் பரிசீலிப்பதாகக் கூறப்படுகிறது.

இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸிலிருந்து இவ்வாண்டே ஓராண்டு ஒப்பந்தத்தில் லிவர்பூலில் 27 வயதான சியெஸ்கா இணைந்திருந்தாரென்பது குறிப்பிடத்தக்கது.

## பாகிஸ்தானின் பயிற்றுவிப்பாளராக ஆகிப்



சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் வரையில் பாகிஸ்தானின் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளுக்கான இடைக்காலப் பயிற்றுவிப்பாளராக பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்துவீச்சாளர் ஆகிஃப் ஜாவிட் நியமிக்கப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திங்கட்கிழமை (18) தெரிவித்துள்ளது.

கரி கேர்ஸ்டன் இராஜினாமா செய்ததையடுத்து ஜேஸன் கிலெஸ்பி பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய நிலையிலேயே அவரை ஆகிஃப் பிரதியிடவுள்ளார்.

இதேவேளை, தேர்வாளர் குழுவின் சிரேஷ்ட உறுப்பினராக தொடர்ந்தும் ஆகிஃப் கடமையாற்றவுள்ளதுடன், சம்பியன்ஸ் கிண்ணத் தொடரைத் தொடர்ந்து அவருக்கு மேலதிக பொறுப்புகள் வழங்கப்படவுள்ளது.

தேசங்களுக்கான லீக்:

# ஸ்கொட்லாந்திடம் தோற்ற போலந்து

### சமநிலையில் போர்த்துக்கல் குரோஷியா போட்டி

ஐரோப்பிய கால்பந்தாட்டச் சங்கங்களின் ஒன்றியத்தின் தேசங்களுக்கான லீக் தொடரில், போலந்தில் செவ்வாய்க்கிழமை (19) நடைபெற்ற அவ்வணியுடனான குழு ஏ போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் ஸ்கொட்லாந்து வென்றது.

ஸ்கொட்லாந்து சார்பாக ஜோன் மக்கின், அன்றூ றொபேர்ட்சன் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றதோடு போலந்து சார்பாகப் பெறப்பட்ட கோலை கமில் பியட்கொவ்ஸ்கி பெற்றிருந்தார்.

இதேவேளை தம்நாட்டில் நடைபெற்ற போர்த்துக்கல்லுடனான குழு ஏ போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய குரோஷியா காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. குரோஷியா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜொஸ்கோ கவ்ரிகால் பெற்றதோடு, போர்த்துக்கல் சார்பாகப் பெறப்பட்ட கோலை ஜோவா பீலிக்ஸ் பெற்றிருந்தார்.

இதுதவிர சேர்பியாவில் நடைபெற்ற அவ்வணியுடனான குழு டி போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் சமப்படுத்திய டென்மார்க்கும் காலிறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

இந்நிலையில், தம்நாட்டில் நடைபெற்ற சுவிற்ஸர்லாந்துடனான குழு டி போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் ஸ்பெய்ன் வென்றது.




விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 20 நவம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.